



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

ஜுன் – 2018

மலர் - 50 இதழ் - 05

✤ ஆசிரியர்

அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

✤ இணை ஆசிரியர்

மெற்றில்டா இராஜேந்திரம்

✤ துணை ஆசிரியர்

பெஸ்லியோ வாஸ்

✤ கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்

✤ வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

✤ முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

✤ பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


அன்புடன் உங்களோடு ........ 01
நற்கருணை மறைபொருள் ........ 02
பதுவையின் புனிதரே ........ 04
திருஅவைச் செய்திகள் ........ 05
நீங்கள் இறக்கப்போகிறீர்கள் ........ 06
நற்கருணையின் நண்பன் ........ 07
மாணவர் பக்கம் ........ 08
வாழ்விலுண்டு என்றும் சிறப்பு ........ 09
எண்ணிப்பார்க்கையில் ........ 09
குறுங்கதை ........ 10
வாழ்க்கையில் மகிழ்ச்சி ........ 12
மருத்துவம் ........ 14
இலக்கிய மஞ்சரி ........ 15
கத்தோலிக்கத் திருஅவையின் ........ 16
இதுதான்டா அரசியல் ........ 18
கடுகுக் கதை ........ 19
வாழ்வில் வெற்றி பெற ........ 20
எறும்பு வீடுகள் ........ 22
வினா விடைப் போட்டி ........ 23
சின்ன விசயங்கள் சிறந்த ........ 24
நாவாலியூர் சோமசுந்தரப் புலவர் ........ 24
கத்தோலிக்க திருமறை ........ 25
திருவிவிலியம் கற்போம் ........ 27
அறிவை வளர்ப்போம் ........ 28



✷ ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ–ர்) ✷



SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com



விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 550/=
(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...

"ஒவ்வொரு முறையும் நாம் அப்பத்தை உண்டு, கிண்ணத்தில் பருகும்போதெல்லாம் ஆண்டவரின் சாவை அறிக்கையிடுகின்றோம்"

அன்புமிக்க சகோதரங்களே!

எனக்காக யாருமே இல்லையே! என்னுடைய துயர் துடைக்க, வேதனைகளைப் போக்க, எனக்கு இரக்கம் காட்ட, என்னை வழிநடத்த யார் இருக்கிறார். என்னை ஒதுக்கிவைத்துப் புறந்தள்ளிவிட்டார்களே என்று நினைப்பவர்களைப் பார்த்து, "இதோ உலக முடிவுவரை என்றும் நான் உங்களோடு இருப்பேன்" என்று இன்றும் கூறுபவர்தான் நற்கருணையில் எங்களுக்காகப் பொறுமையுடன் காத்துக்கொண்டிருக்கிற அதிசயங்கள் செய்கிற ஆண்டவர்.

இன்றைக்கு விஞ்ஞானங்களே வியக்கின்ற வகையில் பல குணப்படுத்த முடியாத நோய்களையெல்லாம் உடையவர்கள் அல்லது மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்கள் அல்லது இத்தோடு உன்னுடைய வாழ்க்கை முடிவடைந்துவிட்டது என்று புறந்தள்ளப்பட்ட பலர் எங்கள் மத்தியில் குணம்பெற்று நலமுடன் வாழ்ந்து அந்த நற்கருணை ஆண்டவர்தான் என்னைக் காப்பாற்றினார் என்று சொல்லுகிறவர்கள் பலரை நாம் பார்த்திருக்கின்றோம். இது எப்படி நடக்கிறது? நற்கருணை உட்கொள்வதால் நோய்கள் நீங்குமா? நற்கருணை உட்கொண்டால் நிம்மதியும், ஆறுதலும், சந்தோஷமும் பெறமுடியுமா? என்ற கேள்விகளுக்கு பதில் கொடுக்கிறது இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா.

ஆண்டவர் திரு நற்கருணையில் அன்புக்காக நொருக்கப்பட்டவராக, அன்புக்காக வேதனைகளை அனுபவித்தவராகச் சிதறிக் கிடக்கின்ற எம்மைச் சந்திக்க வருவதும் இரவும், பகலும் எம்மையும் எம் குடும்பத்தினரையும் நினைத்துக்கொண்டிருக்கிறார் என்பதை மறக்காமல் நினைத்துப் பார்க்கவேண்டும். புனித மக்சிமில்லியன் கொல்பே அவர்கள் சொல்லுவது போல வானதூதர்களே மனிதர்கள் நற்கருணை பெற்றுக்கொள்வதைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார்கள். காரணம், மனிதர்கள் நற்கருணை ஆண்டவரைப் பெறுவதால் அவருக்கு, நெருக்கமானவர்களாகவும், இயேசுவின் சொந்தங்களாகவும் மாறிவிடுவார்கள் என்பதுதான் அதன் உண்மையான பொருளாக அமைகிறது. எனவே, நாம் அடிக்கடி நற்கருணை ஆண்டவரை உட்கொள்கிறபோது கவலைகள் தீர்ந்து, வேதனைகள் அகன்று நோய்கள் நீங்கி, ஆறுதலும் நிம்மதியும் கொண்டவர்களாக எம் வாழ்க்கை மாறுவதை நிச்சயமாக உணருவோம்.

இன்றைக்கு எம்மில் அதிகமான இயேசுவின் பிள்ளைகள் திருப்பலியில் பங்கெடுப்பது கிடையாது. ஆண்டவர் தேவையில்லை, நற்கருணையைப் பெறுவதால் எவ்விதப் பயனுமில்லை என்று ஆண்டவரை விட்டுப் பிரிந்து வாழுவதைப் பார்க்கின்றோம். எங்களிடம் வசதி இருக்கிறது. தேவையானது எல்லாம் சேர்த்து வைத்திருக்கிறோம், குறைகள் எதுவும் இல்லை. அப்படியிருக்க எதற்காக நான் ஆண்டவரைத் தேடவேண்டும் என்ற எண்ணத்தோடு வாழுகிறோம். இப்படிப்பட்ட வாழ்க்கை கடைசியிலே எங்களையே ஏமாற்றிவிடும். நல்ல உதாரணம் இயேசுவின் சீடராக வாழ்ந்த யூதாஸ்காரியோத்து.

வேதம் சொல்வதைப்போல் யூதாஸ் 12 சீடர்களோடு இயேசுவின் பந்தியில் இருந்தவன். ஆண்டவர் தேவையில்லை, நற்கருணை தேவையில்லை, இயேசு வின் அன்பு தேவையில்லை என்று அந்த இடத்தில் இருந்து எழுந்து இயேசுவை விட்டுப் பிரிந்து போகிறான். அப்படிப் பிரிந்து/இயேசுவின் பார்வையில் இருந்து மறைந்த அவனுக்கு வாழ்க்கையில் நிம்மதி கிடையாது – சந்தோஷம் கிடையாது. அவனால் நெடுநாள் வாழமுடியவில்லை, வாழ்க்கையை வெறுத்துக் கடைசியில் தன்னுடைய உயிரைத் தானே பறித்து வாழ்க்கையை முடிக்கிறான். இந்த உண்மைச் சம்பவம் எங்களுக்கு நற்கருணை ஆண்டவரை விட்டுப் பிரிந்து, அவர் தேவையில்லை என்று வாழ்ந்து எங்களால் எதுவுமே செய்யமுடியாது. – அவர் இல்லை என்றால் எமக்கு வாழ்வு இல்லை என்ற உண்மையை உணர்ந்துகொண்டு, எனக்காக எல்லாவற்றையும் செய்துமுடிக்க ஆண்டவர் இருக்கிறார். அடிக்கடி நற்கருணை உட்கொண்டு ஆண்டவர் எனக்கென்று கொடுக்கின்ற ஆசீர்வாதங்களைப் பெற்று நாங்கள் வாழ எங்கள் குடும்பங்களை இந்த மாதம் முழுவதும் நற்கருணை ஆண்டவரின் பாதங்களில் ஒப்படைத்து வாழ்வோம்.

நற்கருணை ஆண்டவர்
உங்களை
ஆசீர்வதிப்பாராக!

– அதிபர் –






"இதில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது"

எபேசியர் 5:32





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்கருணை மறைபொருள்

"எங்கள் நலன்களின் ஊற்று உம்மிடமே உள்ளது" - (தி.பா 87:7)

**52வது** அகில உலக நற்கருணை மாநாடு ஹங்கேரி நாட்டில் புடாபெஸ்ட் நகரில் 13-20 செப்டம்பர் 2020 இல் நடைபெறப்போவதாகத் திருச்சபை அறிவித்துள்ளது. இலங்கையின் பிரதிநிதியாக அதில் கலந்து கொள்ளுமாறு இலங்கை ஆயர் பேரவை எனது பெயரையும் முன்மொழிந்துள்ளது. இம்மகா நாட்டின் கருப்பொருளாக திருப்பாடல் 87:7 "எங்கள் நலன்களின் ஊற்று உம்மிடமே உள்ளது" என்ற வார்த்தைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமான ஆரம்பக் கூட்டம் எதிர்வரும் நவம்பர் 8-10 திகதிகளில் உரோமை நகரில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை இலக்காகக் கொண்டு நற்கருணை பற்றிய சிந்தனைகளை, தியானங்களை தொடர் கட்டுரையாக எழுதிவிட விழைகின்றேன். அதன் முதல் சிந்தனையின் கருப்பொருளாக "நற்கருணை மறைபொருள்" என்ற தலைப்பில் ஆராய்வோம்.




**இயேசு பெருமானின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா 03.06.2018 அன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு மட்/மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி. ஜோசப் பொன்னையா ஆண்டகை வழங்கிய சிறப்புக் கட்டுரை.**



நற்கருணை இறைவன் திருச்சபைக்குத் தந்த மாபெரும் சொத்தாகும். திருச்சபையின் உயிரோட்டமும், ஊற்றும், மையமுமாக விளங்கும் அருளடையாளம் நற்கருணையாகும். நற்கருணையைப் பற்றி 2ம் வத்திக்கான் சங்கம் தெளிவானதொரு வரைவிலக்கணம் தந்துள்ளது. நம் மீட்பர் தமது இறுதி இராவுணவின்போது தமது அன்பு மகளாம் திருச்சபையிடம் தமது இறப்பு உயிர்ப்பின் நினைவுச் சின்னத்தை விட்டுச் சென்றார். அதுவே நற்கருணை எனும் புனிதமிகு மறை பொருளாகும்.

(காண் : 2ம் வத். சங்கம், இறைபணி - 47)

நற்கருணையை ஓர் அருளடையாளம் அல்லது அருட்சாதனம் என அழைப்பதன் காரணம், இறைவன் அருளடையாளங்கள் வழியாக அருளை வழங்குகின்றார். கிறிஸ்து தமது அருளைப் பொழிய வாய்க்கால்களாக ஏற்படுத்திய புனித அடையாளங்களே அருளடையாளங்களாகும். அருளடையாளங்கள் கிறிஸ்து தமது இறப்பாலும், உயிப்பாலும் நமக்குத் தரும் மீட்பையும், அருளுயிரையும் வழங்கி, நாம் கடவுளோடும் பிறரோடும் உறவுகொண்டு வாழச் செய்கின்றன. அனைத்து அருளடையாளங்களும் நற்கருணையை நோக்கியே உள்ளன. நற்கருணையில் இருந்தே தோன்றின என்றால் மிகையாகாது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்கருணை புனிதமிகு மறைபொருள். மறைபொருள் என்றால் 'வற்றாத ஊற்று', 'புதையல்'. நற்கருணை மறைபொருள் பொருள் வளம் மிகுந்தது. காலத்துக்குக் காலம் ஒரு பொருள் முதன்மைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. மேலும் பல புதையல்களை அகழ்ந்தெடுக்க வேண்டும்.

நற்கருணையை ஒரு மறைபொருள் என அழைப்பதன் காரணம், அது பல ஆழ்ந்த உண்மைகளைத் தன்னகத்தே கொண்டிருப் பதனாலாகும். திருச்சபை வரலாற்றை அவதானிக் கையில், காலத்துக்குக் காலம் தாய்த் திருச்சபை யானது அவற்றை அகழ்ந்தெடுத்து சில உண்மைகளைச் சிறப்புப்படுத்தி வந்துள்ளது. எடுத்துக்காட்டாக, நற்கருணையை - அன்பின் அடையாளமாக, ஒற்றுமையின் சின்னமாக, பரம அன்பின் பிணைப்பாக, பாஸ்கா விருந்தாக, உன்னத பலியாக, அன்பு விருந்தாக, வாழ்வு தரும் உணவாக, நன்றிக் கொண்டாட்டமாக, இறை பிரசன்னமாக, மறுவாழ்வில் கிடைக்கப் போகும் மகிமையின் அறிகுறியாக தியானித்து வந்துள்ளது. அள்ள அள்ளக் குறையாமல் ஊறிக் கொண்டேயிருக்கும் வற்றாத ஊற்றுப் போன்று, நற்கருணை மறைபொருளைத் தியானிக்கத் தியானிக்க மேலும் பல ஆழ்ந்த உண்மைகள் வெளிக்கொணரப்படும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஒவ்வொரு திருப்பலியும் நற்கருணை கொண்டாட்டமாகும். அருட்சாதனக் கொண்டாட் டங்களும் நற்கருணைக் கொண்டாட்டத்தில் முழுமை அடைவதால், நற்கருணை அருட்சாதனக் கொண்டாட்டங்களின் மையமாகத் திகழ்கிறது.

நற்கருணை அருட்சாதனத்தின் திருப் பணியாளர் திருநிலைப்படுத்தப்பட்ட குரு ஆவார். ஒவ்வொரு குருவின் முதன்மையான பணியும் நற்கருணை அருட்சாதனத்தைக் கொண்டாடு வதுதான்.

இயேசு அப்பத்தை எடுத்துக்கூறிய வார்த்தைகளும், இரசத்தை எடுத்துக்கூறிய வார்த்தைகளும் கடவுளின் மனிதனுடனான முழு வரலாற்றை ஒன்றாகச் சுருக்கிக் கூறுகின்றன. இறந்த காலம் குறித்துக் காட்டப்பட்டு விளக்கப் பட்டுள்ளதுடன், இறையாட்சியுலகின் எதிர்காலமும் முன்மொழியப்பட்டுள்ளது. இயேசு கூறுபவை வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல, அவர் கூறுவது ஒரு செயல்! உலக வரலாற்றின், நமது வாழ்வின் மையமான செயல்!

கிறிஸ்துவின் திரு உடல், திரு இரத்தத் திருநாளில், இயேசு அப்பத்தையும், இரசத்தையும் தமது பிரசன்னத்தின் - உடனிருப்பின் அடையா ளமாகத் தேர்ந்தெடுத்தார். இந்த இரண்டு அடையாளங்களிலும் தம்மைப் பகுதியாக அல்ல; நிறைவாக வழங்குகிறார். உயிர்த்த ஆண்டவர் பிளவுபட்டவர் அல்ல; அவர் ஒரு நபர்! அடையாளங்கள் வழியாக நமதருகில் வருகிறார்! நம்முடன் தம்மையே இணைக்கிறார்! இயேசுக்கிறிஸ்துவின் மறைபொருளை நற்கரு ணையில் தெளிவாகப் புரிந்துகொள்ள, ஒவ்வொரு அடையாளமும் அவரது ஒரு குறிப்பிட்ட மறை பொருளை அதற்குரிய வெளிப்பாட்டின் வழி யாகப் பிரதிநிதித்துவப்படுத்தி நம்மிடமும் பேச விரும்புவதைக் கவனிப்போம்.

நற்கருணைப் பவனியிலும், ஆராதனை யிலும், சிறிது கோதுமை மாவு மற்றும் தண்ணீரால் செய்யப்பட்ட சாதாரண உணவாகிய அப்பத்தை அர்ச்சிக்கப்பட்ட நற்கருணை அப்பமாகப் பார்க் கின்றோம். இந்தவகையில் இயேசு முதலில் தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட ஏழைகளின் உணவாக நற்கருணை தோன்றுகிறது.

திருச்சபை இந்த அப்பத்தையும், இரசத் தையும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கையில் அவற்றை நிலத்தின் பலனாகவும், மனித உழைப் பின் பயனாகவும் பார்க்கிறது. மனித உழைப்பு அன்றாடம் வெயிலின் கொடுமையில் நிலத்தில் உழுது, விதைத்து, அறுவடை செய்து இறுதியாக அப்பமாகிறது. இங்கு 'அப்பம்' நாம் உழைத்து உருவாக்கும் பொருளாக மட்டுமல்லாது, நிலத்தின் கனியாகப் பார்க்கப்படுவதால், இது ஒரு கொடையாகும் (GIFT). நிலத்தின் கனி என்பதால் நாம் அதன் தயாரிப்பாளர் என்ற பெருமைக்குரியவராக முடியாது. எனவே, அப்பத்தை விண்ணக மற்றும் நிலத்தின் கனியாகப் பார்க்கலாம். இதில் நிலத்தின் ஆற்றலையும், விண்ணகக் கனிகளாக சூரிய ஒளியையும், மழை யையும் கருதலாம். அப்பம் செய்யத் தண்ணீர் முக்கியம். இவைகள் இறைவனின் கொடைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளின்றி நம்மால் அப்பத்தைத் தயாரிக்க இயலாது.

இந்த நற்கருணை அப்பம் வழங்கும் ஆழமான பொருளை "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால், அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (யோவா 12:2) என்ற இயேசுவின் வார்த்தைகளில் காணமுடிகிறது. கோதுமை மணி மாவில் உருவான அப்பத்தில் ஆண்டவரின் பாடுகள் மறைந்துள்ளன. அரைக்கப்பட்ட மாவு கோதுமையின் இறப்பையும், உயிர்ப்பையும் முன்னுணர்த்துகிறது. அரைக்கப்பட்டு அப்பமாகச் சுடப்படுவதில் (சாவு வழியாகவே உயிர்ப்பு வருகிறது என்ற) பாடுகளின் மறை பொருளைத் தாங்கிச் செல்கிறது. அது போலவே நிலத்தின் பலனும், புது வாழ்வும் உருவாகின்றன.

நற்கருணையில் அப்பம் எனும் அருளடையாளம் குறித்து நிற்கும் மறைபொருட்களை தியானித்து, சிந்தித்து அதற்கேற்ப நமது வாழ்வை மாற்றியமைப்போம். ■

## எளிமையான வீட்டுக் குறிப்புகள்...

இரவில் படுக்கச் செல்லும் முன் கழிவறை மற்றும் குளியலறையில் பிளீச்சிங் பவுடரை தூவி விட்டால் கரப்பான் பூச்சியின் தொல்லை இருக்காது.





வாழைக்காயை முழுசாக குக்கரில் வேகவைப்பதால் குக்கரின் உள்பகுதி பிசுபிசுப்பாகவும் கருமையாகவும் காணப்படும். குக்கரின் உள்பகுதியில் எண்ணெய் தடவிவிட்டு வேகவைத்தால், இதைத் தடுக்க இயலும்.



# பதுவையின் புனிதரே!

பதுவையின் பாதுகாவலராம் புனித அந்தோனியாரே!
சாதுவான் சாகசவீரனே நீர்தானய்யா
ஏதுமறியா இளவலைப்போல் உமதுமுகம்,
போதுமான புதுமைகளைப் புரிந்தீரே புவிதனிலே!

பட்டி, தொட்டியெல்லாம் உன் நாமமே!
கொட்டிவிட்ட கொள்ளையான வரங்களையே
கெட்டியாகக் கரம் பற்றி வேண்டினரே – பக்தர்கள்
எட்டிவிட்ட இலக்குகள்தான் எத்தனையோ பாரினிலே!

அகிலமெங்கும் அர்த்தமுள்ள அன்பான புனிதரே!
நித்திலத்தில் உனை நெடுநாளாய் சுகிப்பவர்கள் – இம்
மாநிலத்தில் நீர்தந்திட்ட புதுமைகள் யாவையுமே
புனித தலங்களில் புடமிட்டே வைத்திட்டனரே உலகிலே!

அற்புதரே, அந்தோனி மாமுனியே!
அற்பர்கள் உனைத் தொல்லைக்குள்ளாக்கினாலும்,
பற்பல நன்மைகள் அவரவர்க்கு நீர் செய்வதினால்,
பொற்பதம் தொழுகின்றோம் புதுமை அந்தோனியாரே!

- பீ.ஜ. கைடிபொன்கலன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாட்டுத் தூதர்களுக்கு திருத்தந்தை வழங்கிய உரை



பன்னாட்டளவில் தூதரகத் தொடர்புகளை மேற்கொள்வது, பொறுமை நிறைந்த பணி என்றும், இப்பணியின் வழியே, நீதி, நல்லிணக்கம், மனிதர்களுக்கு வழங்கப்படவேண்டிய மாண்பு ஆகியவை உறுதி செய்யப்படுகின்றன என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன்னைச் சந்திக்க வந்திருந்த பன்னாட்டுத் தூதர்களிடம் கூறினார்.

டான்சானியா, லெசோதோ, பாகிஸ்தான், மங்கோலியா, டென்மார்க், எத்தியோப்பியா மற்றும் பின்லாந்து ஆகிய ஏழு நாடுகளின் தூதர்களாக, திருப்பீடத்தில் பணியாற்ற வந்திருக்கும் அதிகாரிகளின் நற்சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட திருத்தந்தை, அவர்களுக்கு வழங்கிய குறுகிய உரையில் இவ்வாறு கூறினார்.

ஐ.நா. அவையில் மனித உரிமைகள் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதன் எழுபதாம் ஆண்டு நிறைவு, இவ்வாண்டு சிறப்பிக்கப்படுவதை தன் உரையில் குறிப்பிட்ட திருத்தந்தை, பல்வேறு தேவைகளால் துன்புறுவோர் மீது தனிக் கவனம் செலுத்துவதற்கு, இத்தருணம் நம்மை உந்தித் தள்ளுகிறது என்று எடுத்துரைத்தார்.

'உலகமயமாக்கப்பட்டுள்ள அக்கறையின்மை' என்ற குறையை நாம் கண்டுகொள்ளாமல் இருக்க இயலாது என்பதை சிறப்பாகச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை, அநீதிகள் பெருகும் வேளையில், நம் பார்வைகளை வேறுபக்கம் திருப்பிக் கொள்வது, இன்றைய உலகில் பரவியுள்ள நோய் என்று கூறினார்.

அரசுகளின் அடக்குமுறைகள், சமுதாயப் பாகுபாடுகள் ஆகிய கொடுமைகளால் தங்கள் சொந்த வீடுகளையும், நாடுகளையும் விட்டுத் தப்பியோடும் மக்களின் அவலநிலை, இன்றைய உலகில் பெரும் மனிதாபிமான நெருக்கடியாக வளர்ந்துள்ளது என்று கூறிய திருத்தந்தை, பன்னாட்டுத் தூதர்கள், இந்த அவலநிலைக்குத் தகுந்த தீர்வுகளை அரசுக்கு உணர்த்தக் கடமைப்பட்டுள்ளனர் என்று கேட்டுக்கொண்டார்.

■ **ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

## 14 புதிய கர்தினால்களுள் ஆசியாவிற்கு மூவர்





ஜப்பான், ஈராக், பாகிஸ்தான் ஆகிய மூன்று ஆசிய நாடுகள் உட்பட ஏழு நாடுகளைச் சேர்ந்த 14 புதிய கர்தினால்களின் பெயர்களை அறிவித்து, வருகிற ஜூன் 29ம் தேதியன்று இப்புதிய கர்தினால்கள் நிகழ்வு இடம்பெறும் என அறிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். தூய ஆவியார் பெருவிழாவாகிய ஞாயிறு நண்பகலில் வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்த விசுவாசிகளுக்கு, அல்லேலூயா வாழ்த்தொலிஉரை வழங்கிய பின்னர், 14 புதிய கர்தினால்கள் பற்றி அறிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஜப்பான், ஈராக், பாகிஸ்தான், போர்த்துக்கல், பெரு, மடகாஸ்கர், இத்தாலி ஆகிய ஏழு நாடுகளைச் சேர்ந்த 14 புதிய கர்தினால்களின் பெயர்களை அறிவித்த திருத்தந்தை, இவர்கள், இப்பூமியில் அனைத்து மனிதருக்கும், கடவுளின் இரக்கமுள்ள அன்பைத் தொடர்ந்து அறிவிக்கும் திருஅவையின் உலகளாவிய பண்பை வெளிப்படுத்துகின்றார்கள் என்று கூறினார். ஈராக் நாட்டின் கல்தேய வழிபாட்டுமுறை முதுபெரும் தந்தை லூயிஸ் இரஃபேல் முதலாம் சாக்கோ, பாகிஸ்தானின் கராச்சி பேராயர் ஜோசப் கூட்ஸ், ஜப்பானின் ஒசாகா பேராயர் தாமஸ் அக்குய்னாஸ் மான்யோ (Thomas Aquinas Manyo) ஆகிய மூவர் ஆசியர்கள்.


திருப்பீட விசுவாசக்கோட்பாட்டு பேராயத் தலைவர் பேராயர் லூயிஸ் லதாரியா (Luis Ladaria), உரோம் மறைமாவட்டப் பிரதிநிதி பேராயர் ஆஞ்சலோ தெ தொனாதிஸ் (Angelo De Donatis), திருப்பீடச் செயலகத்தின் பிரதிநிதியும், மால்ட்டா இராணுவ பக்த அமைப்பின் சிறப்பு பிரதிநிதியுமான ஜொவான்னி ஆஞ்சலோ பெச்சு(Giovanni Angelo Becciu), திருத்தந்தையின் பிறரன்புப் பணி அலுவலகத்தின் தலைவ ரான பேராயர் கோன்ராட் கிராஜேவிஸ்கி (Konrad Krajewski), போர்த்துக்கல் நாட்டு பாத்திமா பேராயர் அந்தோனியோ தோஸ் சாந்தோஸ் மார்தோ(António dos Santos Marto), Huancayo பேராயர் Pedro Barreto, Toamasina பேராயர் Desiré Tsarahazana, அக்குய்லா பேராயர் Giuseppe Petrocchi, Xalapa முன்னாள் பேராயர் Sergio Obeso Rivera, Corocoro முன்னாள் ஆயர் Porco, கிளேரிசியன் சபையின் அருள்பணியாளர் Aquilino Bocos Merino ஆகியோர் புதிய கர்தினால்கள் ஆவர்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீங்கள் இறக்கப் போகின்றீர்கள் என்பதை வெளிக்காட்டும் சில அறிகுறிகள்!



பிறப்பு என்ற ஒன்று இருந்தால், நிச்சயம் இறப்பும் இருக்கும். புராணங்கள், வேதங்கள் அல்லது சாஸ்திரங்கள், ஒருவரை மரணம் நெருங்கிறது என்றால் அது நிச்சயம் ஒருசில அறிகுறிகளை முன்பே வெளிக்காட்டும் என்று சொல்கின்றன. அதிலும் ஒவ்வொரு புராணங்க ளும் ஒவ்வொரு விதமான அறிகுறிகள் தென்படும் என்று சொல்கின்றன. இங்கு ஒருவருக்கு விரைவில் மரணம் நேரப்போகிறது என்பதை உணர்த்துவ தாகக் கூறப்படும் சில அறிகுறிகளைப் படித்துப் பாருங்கள்.

**அறிகுறி - 1**

யாரால் துருவ நட்சத்திரங் களைக் காண முடியவில் லையோ, அவர்கள் கூடிய விரைவில் இவ்வுலகை விட்டு செல்லப் போகிறார்கள் என வேத வசனங்கள் கூறுகின்றன.

**அறிகுறி - 2**

ஒருவர் சூரியனைக் காணும் போது, அதில் திரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு உருவத்தைக் கண்டால், மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தமாம். அதில் இத்தகையவர்கள் 11 மாதங்க ளில் இறந்து விடுவார்கள் என்றும் வேத வசனங்கள் கூறுகின்றன.

**அறிகுறி - 3**

மணலில் ஒருவர் நடந்து செல்லும்போது, பாதச் சுவடுகள் முழுமையாகாமல் இருந்தால், அத்தகையவர் கள் 7 மாதங்களில் உலகை விட்டுச் சென்று விடுவதற் கான வாய்ப்புக்கள் உள்ளதாம்.

நன்றி : இணையம்

**அறிகுறி - 4**

கழுகு அல்லது காகம் ஒருவரது தலையில் அமர்ந் தாலோ அல்லது உரசினாலோ, துக்க காரியம் நடக்கப் போகிறது என்று அர்த்தம். அதுவும் அத்தகையவர்கள் 6 மாதத்திற்குள் இறக்க வாய்ப்புள்ளதாம்.

**அறிகுறி - 5**

புராணங்களின் படி, ஒருவரது கண்களுக்கு தன்னைச் சுற்றி ஒரு திரிக்கப்பட்ட உருவத்தைக் கண்டால், அவர்கள் 4 மாதங்களில் உலகை விட்டு சென்றுவிடுவார்களாம்.

**அறிகுறி - 6**

மழை வருவதற்கான அறிகுறி ஏதுமின்றி, ஒருவர் மின்னலைக் கண்டால், அவர்கள் 2 – 3 மாதங்களில் இறந்து விடுவதற்கான வாய்ப்புள்ளதாக வேத வசனங்கள் கூறுகின்றன.

**அறிகுறி - 7**

ஒருவரது பாதம் குளித்த உடனேயே வறட்சி அடைந்துவிட்டால், அத்தகையவர்கள் அடுத்த 10 நாட்களில் இறந்துவிடும் வாய்ப்புள்ளதாம்.

**அறிகுறி - 8**

விளக்கு அணையும்போது, அதிலிருந்து வரும் வாசனையை நுகர முடியாவிட்டால், அவர்கள் இவ்வுலகில் இன்னும் சில காலம் மட்டுமே வாழ்வார்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நற்கருணையின் நண்பன்

ஆனி அரும்பிவிட்டால் அகிலமெங்கும் ஆனந்தமூட்டும் அற்புத நாதன் பதுவைப் புனிதர் அந்தோனியாரின் திருநாள் கொண்டாட்டம் நடக்கும். இன, மத, மொழி வேற்றுமை எதுவுமின்றி விழாவெடுக்கும் பரிசுத்த மாதம் இதுவாகும். கத்தோலிக்க மக்களுக்கு இதுவோர் விசேஷ மாதமாகும். புனித அந்தோனியார் சிறு வயது முதல் நற்கருணை நாதரில் விசேட பக்தி கொண்டு வாழ்ந்தார். யோவான் 6/56, "எனது தசையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்". இவ்வார்த்தைகள் அவர் வாழ்வில் அழியா ஆன்மீக உணவாக, செயலாக மாறின. அனுதினமும் திருப்பலி மூலம் உயிர்த்த உயிருள்ள இயேசுவை ஏந்திய பரிசுத்த கரங்களால் பல அற்புதங்களைப் புரியும் வலிமை பெற்றார். புனித அந்தோனியார் தன்னிடம் தயவுடன் நெருங்கி வந்து கண்ணீர் சிந்திக் கதறி அழுதவர்களுக்கு ஆறுதல் அளித்து, வேண்டிய வரம் கொடுத்து, அவர்களை நற்கருணை நாதர்மேல் நம்பிக்கை வைக்கவும், அவர் வழியைப் பின்பற்றவும் வழிகாட்டினார். வழிகாட்டி வருகிறார். யோவான் 6/48-50 "வாழ்வு தரும் உணவு நானே. உங்கள் முன்னோர் பாலை நிலத்தில் மன்னாவை உண்ட போதிலும் இறந்தனர். உண்பவரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த உணவே".

எண்ணற்ற அதிசயங்களைச் செய்துவந்த புனித அந்தோனியார் வாழ்வில் நடந்த ஒரு புதுமை என் வாழ்வைத் தொட்டது. உங்கள் உள்ளத்தையும் அது தொட வேண்டும். உங்கள் வாழ்வில் புத்தொளி வீசச் செய்யட்டும். புனிதரின் பக்தி அதிகரிக்கச் செய்யட்டும்.

போர்ஜெஸ் என்ற ஊரிலே (Bourges) போணில்லோ என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் முப்பது வருடங்களாக வேத விரோதச் செயல்களுக்குத் தலைமை தாங்கி வந்தான். அவன் மிகக் கொடியவன். ஒரு தினம் போணில்லோ புனிதரிடம் சென்று திரு அப்பத்தில் இயேசு இல்லை என்று வாதிட்டான். புனித அந்தோனியார் பல விளக்கங்களைக் கூறினார். அவன் அதை ஏற்க மறுத்தான். இறுதியாகப் போணில்லோ புனித அந்தோனியாரை ஒரு போட்டிக்கு அழைத்தான். அவரும் அதற்கிணங்கினார். போட்டி நிபந்தனைகளின் படி போணில்லோ தன் கழுதைக்கு மூன்று நாட்கள் உணவு கொடுக்காமல் பட்டினி போடுவதாகவும், நான்காம் நாள் அக்கழுதையைக் குறிப்பிட்ட ஓர் இடத்திற்கு அழைத்து வருவதாகவும், அதற்கு முன்னால் உணவை வைத்து விடுவதாகவும் கூறினான். அவ்வேளை புனித அந்தோனியார் நற்கருணைநாதரைக் கரங்களில் ஏந்தி வரவேண்டும் எனவும், கழுதை நற்கருணை நாதரை மண்டியிட்டு வணங்கினால் போணில்லோ தனது அல்பிஜீனிய பேதகத்தை விட்டுத் திருமறையை ஏற்றுக் கொள்வதாகவும் கூறினான். போட்டி ஆரம்பமாகியது. கழுதையின் முன்னால் அதன் உணவு வைக்கப்பட்டிருந்தது. புனித அந்தோனியார் நற்கருணைநாதரைக் கரங்களில் ஏந்திவந்து கழுதைக்குச் சில அறிவுரைகளை எடுத்துரைத்தார். அதற்கு முன் மூன்று தினங்கள் செப, தப, ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். அதன் பலனாகக் கழுதை புனித அந்தோனியார் பக்கம் திரும்பி மண்டியிட்டு நற்கருணையை வணங்கியது. போணில்லோ கதறி அழுதான், புலம்பினான். தனது அறியாமையை எண்ணி வருந்தினான். அவனும் அவனது குடும்பமும், குழுவும் மனம்மாறிக் கத்தோலிக்க மறையில் சேர்ந்தனர். நற்கருணை நாதர் மேல் நாமும் ஆழ்ந்த விசுவாசம் கொண்டு வாழ்வோம். புனித அந்தோனியாரும் எம்மை நெருங்கி வருவார்.

- அருட்சகோதரி லூட்ஸ் F.M.M -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிறிஸ்தவம்

# மாணவர் பக்கம்

க.பொ.த. உயர்தரம்

- திலக்ஷினி கஜேந்திரன் -

**இலங்கைத் திருச்சபையில் 2ம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் தாக்கங்கள்:**

இச்சங்கமானது திருச்சபையின் 21வது பொதுச் சங்கமாய்க் கருதப்படுகிறது. இச்சங்கம் நடைபெறும் என 1959.01.25ல் திருத்தந்தை 23வது அருளப்பரினால் அறிவிக்கப்பட்டது. 3 வருடகால ஆயத்தங்களின் பின் இது, 1962.10.11 தொடக்கம் 1965.12.08 வரையான காலப் பகுதிகளில் வத்திக்கான் நகரில் இடம்பெற்றது.

இருபதாம் நூற்றாண்டில் கூட்டப்பட்ட மிக முக்கியமான நிகழ்வான இச்சங்கமானது, எந்தவொரு குறிப்பிட்ட நம்பிக்கை உண்மையை வரையறுக்கவோ, தப்பறைகளைக் கண்டனம் செய்யவோ கூட்டப்படவில்லை. மாறாகத் திருச்சபையைக் காலத்தின் தேவைக்கேற்ப மறுசீரமைத்து அதற்குப் புத்துயிரூட்டி, புதியதொரு சிந்தனையை அளித்து, ஆழமான பொருள் நிறைந்த விதத்தில் அது இவ்வுலகில் பணியாற்றிட வழிவகுக்கும் நோக்குடனேயே கூட்டப்பட்டது.

திருச்சபையானது காலத்தின் குறிகளை அறிந்து செயற்பட வேண்டும். நம்பிக்கை கொண்டோரிடையே கிறிஸ்தவ வாழ்வை நாளுக்கு நாள் வளர்க்க வேண்டும், மாற்றங்களுக்கு உட்பட்ட நிறுவனங்களை இக்காலத் தேவைக்கேற்ப நன்முறையில் தழுவி அமைக்க வேண்டும், கிறிஸ்தவர்கள் ஒன்றுபட வேண்டும் எனும் நோக்கங்களுடனே கூட்டப்பட்டதாகும். சுருங்கக் கூறின் ஆயர்கள், குருக்கள், துறவியர், இல்லறத்தார் இன்றைய நவீன உலகில் திருச்சபையின் வளர்ச்சியில் எந்தவொரு வழியில் பங்கு கொள்ளலாமென ஆராய்வதே இச்சங்கத்தின் முக்கிய நோக்காகும். திருச்சபையின் உள் வாழ்வு பற்றியும், உலகோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றியும், பிற கிறிஸ்தவச் சபைகளுடனான உறவை ஏற்படுத்துதல், அனைத்துலக சமயங்களோடும், எல்லா மக்களோடும், இன்றைய உலகோடும்

உறவை ஏற்படுத்துதலைக் கருத்திற் கொண்டமைந்தது இச்சங்கமாகும். உலகனைத்திலுமுள்ள 2900ற்கும் மேற்பட்ட ஆயர்கள் இதிற் கலந்து கொண்டனர்.

இச் சங்கத்தின் முன்னரும், அதன் ஆரம்ப கட்டத்திலும் நிலவிய கடும் போக்கு, இறுக்கமான கொள்கைகள். எளிமையடைந்து, புதிய உதயத்திற்கு அவசியமான நெகிழ்வுடனும், திறந்த மனதுடனும் கலந்துரையாடித் தகுந்த தீர்மானங்களை எடுக்க ஏற்ற சூழலை உருவாக்கியது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயர்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடல் மூலம் புதிய கண்ணோட்டத்தில் திருச்சபையினை வழிநடத்திச் செல்ல வழிவகைகளை ஆராய்ந்தனர். இச்சங்கத்தின் மூலமே உலகனைத்திலுமுள்ள மக்களின் குரல் ஒலித்தது. திருச்சபையின் எல்லா மரபுச் செல்வங்களின் தாக்கமும் உணரப்பட்டது. இறுதியாக இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும், முடிவுகளும் 16 கொள்கைத் திரட்டுக்கள் மூலம் வெளியிடப்பட்டன.

எனவே, இந்த 2ம் வத்திக்கான் சங்கமானது இன்று அனைத்துலக திருச்சபையிலும் மாபெரும் தாக்கத்தினை ஏற்படுத்திய புதியதொரு உயிரோட்டமான மறுமலர்ச்சியினை கொண்டுவந்துள்ளதென்றால் அது யாராலும் மறுக்க முடியாததாகும். நீதிக்காக உழைக்கும் மனநிலையினை உருவாக்கியுள்ளது. எனவே, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இச்சங்கத்தின் படிப்பினைகளும், முற்போக்குச் சிந்தனைகளும் இலங்கைத் திருச்சபையில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், மாற்றங்கள் மிகக் குறைவாகக் காணப்படினும், திருச்சபையின் பல்வேறு துறைகளில் பல்வேறு மாற்றங்களை கண்டுள்ளது. இவற்றினை விரிவாக அடுத்த தொடரில் காண்போம்....

தொடரும் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாழ்விலுண்டு என்றும் சிறப்பு!



ஒருபாவம் பண்ணாமல் உளம்தீது எண்ணாமல்
உயர்வோடு வாழ்ந்தாலும் உலுத்தர் தீ மூட்டுகின்றார்
கருவோடு வந்தகலை கனிவோடு நாமளித்தால்
கயவர்கள் மனக்கனலால் கருக்கவே முனைவதேனோ!

பாலுண்ணக் கொடுத்தாலும் பழம்பிழிந்து அளித்தாலும்
பாவியர்கள் அருந்திவிட்டும் பழிப்பதென்ன புளிப்பதெனவே
ஆலயத்தைக் கட்டிவிட அதற்குள்ளே மதுமாம்சம்
அடுக்கிவைத்து விலைகூறி விற்றவர்தம் வழித்தோன்றலோ?

கூடுகட்டிவாழ வழிதெரியாத குயிலினம்போல்
கேடுகெட்டு வாழும்நிலை கீழ்மையெனல் கண்டு திருந்தார்
பாடுபட்டுத் தேடிவைக்கப் பாவியர்கள் தாம்திருடிப்
பாடிமகிழ்ந்தாடுவது பாவமெனல் எண்ணிவருந்தார்

கொள்ளைப்பணம் பொருளிருந்தும் குடிசையிலே பசியாலே
கூவியழும் குழந்தையுண்ணக் கொடுக்குமனம் இரங்க மறுப்பார்
வெள்ளையுடை பூண்டுநகை வேண்டுமட்டும் தானணிந்து
வீதியுலா வருகையிலும் பிச்சையென இரப்போர்க்கு ஈயார்

பிறப்பெடுத்தோர் அனைவோர்க்கும் இறப்புவருமென்கின்ற
பேருண்மைதனை மறந்து வாழுகின்ற புவிமனிதர்
இறப்பின்பின் எழுந்தசுதன் இயேசுவழி ஒன்றேமெய்
இதையுணர்ந்து நடப்போர்க்கே வாழ்விலுண்டு என்றுஞ் சிறப்பு.

■ கவிஞர் நிலாதமிழின்தாசன்

# எண்ணிப்பார்க்கையில்...



## இரண்டாம் வாய்ப்பு

வாழ்க்கை என்பது வாழ விரும்பும் எமக்கு
வாய்ப்புக்கள் பலதையும் தருகின்றது!
ஒன்றில் நாம் தவறினாலும்
மற்றொன்றில் முயலும் வண்ணம்
சந்தர்ப்பங்கள் நமக்குக் கிட்டும்.
ஒரு வாசல் மூடிக் கொள்ள
இன்னுமொரு வாசலைத் திறந்து விடுவது
இறைவனின் சுபாவம்!!
ஆறுதலாக எண்ணிப்பார்க்கையில் ....
முதல் முறை வாய்ப்பு வரும்போது
அதற்கு நாம் தயாரில்லை என்றால்
கோட்டை விடுவது சகஜம்தானே.
அதற்குத்தான் இரண்டாம் வாய்ப்பை
இறைவன் நமக்குத் தருகிறான்
என்பது நமக்குப் புரியவரும்.
அதைப் பற்றிக் கொள்வது நமது திறமை!
பல பேருக்கு இரண்டாம் வாய்ப்பு
என்பதே கிடையாமற் போகிறது இல்லையா?

ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்

நிலா தமிழின் தாசன்

குறும்பா



## சரியா

கரியாகி அழிகிறது சிரியா....!
கண்மூடிக் குண்டுமழை சொரிவார்.
எரிதழலுள் மழலையரும்
ஏங்கியழும் பெண்களொடு முதியோர்
சரிந்தழியும் மாகொடுமை சரியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலை வேளையில் ஏதோவொரு அலுவலாகப் புறப்பட்ட அவர், அநாதையாய் நின்ற நாய்க்குட்டி ஒன்றைக் கண்டதும் சைக்கிளிலிருந்து இறங்கித் தூக்கிப் பார்த்தார். கடுவன் குட்டி. வீட்டில் ஒரு நாய் வளர்க்க வேண்டு மென்று சில நாள்களாய் மனைவிக்குச் சொல்லி வந்தவர், தனது அதிர்ஷ்டம் தானென்று மகிழ்ந்தவராய்க் குட்டியைத் தூக்கி முன் பாஸ்கற்றில் போட்டுக்கொண்டு வீடு திரும்பினார்.

"ஏனப்பா உங்களுக்கு இந்த வேலை? தெருவிலை நிண்டதைப் பிடிச்சுக்கொண்டு வாறீங்களே.... வளர்க்கிறதென்றால் நல்ல இனமாய்ப் பார்த்து வாங்க வேண்டியதுதானே.... பொக்கற் டோக்காவது வடிவாய் அடக்கமாயிருக்கும்..."

மனையாள் அலுத்துக்கொண்டாள். இளைய மகன் ஓடிவந்து குட்டியைத் தூக்கிவைத்துக்கொண்டு சொன்னான்,

"ஏனம்மா, இதுக்கென்னவாம்...? அழகான இப்பிடியொரு குட்டி கிடைச்சதே காணும்"

"அதுக்கில்லை அப்பு.... இது எப்படிப்பட்டதென்று அறியாமல்..."

மற்ற இரு பிள்ளைகளும் ஓடி வந்தனர்.

"அம்மா, தெருவிலை நின்ற குட்டியென் றாலும் கண்ணுக்குக் குளிர்ச்சியாயிருக்கே, இது போதாதா? அதைக் குளிக்கவார்க்கிற பொறுப்பை நான் எடுக்கிறன்" என்றான் மூத்தவன்.

"அதுசரி, நான் இனித் தலயிடல்லயப்பா... என்னப்பா, நீங்கள் போன காரியத்தை முடிச்சுக் கொண்டு வாங்கோ" என்று புன்முறுவலுடன் அப்பாவை அனுப்பி வைத்தாள் அம்மா.

அவர் கைகளைச் சோப்பிட்டுக் கழுவிக் கொண்டு புறப்பட்டார். குட்டியைத் தூக்கி நெஞ்சோடு அணைத்துக் கொண்டான் தம்பி. அவன் முகத்தில் அப்படியொரு பிரகாசம்.

"அண்ணா, சின்னன் .... குளிர் தாங்காது. பிறகு குளிக்கவார்க்கலாம்"

அவன் அதன் தலையைக் கோதினான் வாஞ்சையுடன். அதுவும் தன் பங்கிற்கு அவன் மறு கையை நக்கி, தன் விசுவாசத்தை வெளிப்படுத்தியது. கீழே இறக்கிவிட்டதும், அவன் கால்களையே சுற்றிச் சுற்றி வந்து மெதுவாக நகத்தால் விறாண்டியது.

"குட்டி நாய்க்கும், குழந்தைப் பிள்ளைக்கும் செல்லம் குடுக்கக்கூடாது. இண்டைக்கு மெல்லிசாய்க் கீறும். நாளைக்கு பெரிய கடிகாயத் தையே ஏற்படுத்தும். அப்ப தெரியும்... நாயின்ர எச்சிலே உடலிலை படக்கூடாது..."

தன்பாட்டில் புறுபுறுத்துக்கொண்டே போனாள் அம்மா. குட்டி கொஞ்சம் பெரிதாக வளர்ந்ததும், அம்மா கட்டிப் போடுவதும், பிள்ளைகள் அவிழ்த்து விடுவதுமாக ஒரே ரகளை.

இப்பொழுதெல்லாம் உணவை அதற்குரிய தட்டில் போட்டபின் யாரும் நெருங்கினால் குரைத்து முறைக்கிறது. அது உண்டு முடிக்கும்வரை யாரும் அதனை நெருங்கமுடியாது. அம்மா பிள்ளைகளைக் கடிந்து கொள்வாள். அதனை யாரும் பொருட்படுத்துவதாயில்லை.

"அது சாப்பிடயுக்கை நீங்களேன் கிட்டப்போறியள்...."

அலட்சியப்படுத்தினான் மூத்தவன். சின்னவன் "வவ்... வவ்..." என்று வாயைச் சுழித்து அம்மாவை நையாண்டி பண்ணினான்.

நாளும் வளர வளர, நாயும் அதன் சேட்டைகளும் அம்மாவிற்குப் பொறுக்கவில்லை. ஆயினும் வாளாவிருந்தாள். வீட்டுக்கு வருவோர் யாராயினும் அவர் தெரிந்தவராயிருந்தால்கூட குரைத்துப் பெரிதாகப் பயமுறுத்தத் தொடங்கியது. பகலில் அதனைக் கட்டிப் போடுவதென ஏகமனதாக முடிவெடுத்தனர். அதற்குத் தீனி போட அப்பா மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பெடுத்துக் கொண்டார். அப்பா வெளியே போயிருந்த வேளையில் ஒருநாள் இரண்டாமவன் சாப்பாட்டுக் கோப்பையைத் தூக்கிக் கொண்டு அதனை நெருங்கியபோது அம்மா தன்னாலான மட்டும் தடுத்துப் பார்த்தாள்,

"அப்பா வந்து போடட்டும். நீ கோப்பையை வை" என்று. ஏறச் செவியனாய் அவன் சிரித்துக் கொண்டே அதற்குரிய தட்டில் போடக் குனிந்தபோது, அது கோப்பையைத் தட்டிவிட எத்தனித்தது. இவன் சற்றுப் பின்வாங்கினான். அதற்குள் அவன் எச்சிற் கையை எட்டிக் கடித்ததும் கோப்பையை நழுவவிட்டு,

"ஐயோ அம்மா!"
என்று அலறினான் அவன்.

தான் எச்சரித்தும் கேட்காமல் போனானேயென்று கடிந்து கொள்ளாமல், தாயின் வாஞ்சையோடு பதறினவள்,

"என்ர குஞ்சு.... கையைக் காட்டடா"

என்று திருப்பிப் பார்த்தாள். பற்கள் ஆழமாகப் பதிந்ததில் ரத்தம் கசிந்தது. அம்மா சோப்பினால் கையைச் சுத்தப் படுத்திக் கழுவினாள்.

மூத்தவன் சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாகக் கிளம்பினான். வழியில் எதிர்ப்பட்ட அப்பாவிடம்,

"தம்பிக்கு நாய் கடிச்சிட்டுது அப்பா. நான் ஆஸ்பத்திரிக்கு....."

"சரி, நான் அவனைக் கொண்டு போறன். நீ வீட்டுக்குப் போ...."

"இல்லையப்பா ... இவர் அவசரமாய்ச் சாப்பிட்டுத் தானும் அதுக்கு உணவு போட வேணுமென்டு ஆசைப்பட்டதாலை .... அப்பவும் அம்மா தடுத்தவ .... சின்னவனும் பசியோடை...."

அப்பாவின் பதிலுக்குக் காத்திருக்காமல் கிளம்பினான்.

இப்போதுதான் அவருக்குச் சுரீரென்று உறைத்தது. வீடு நோக்கிப் புறப்பட்டவர் தன்னைத் தானே நொந்து கொண்டார். இனி அது யார்மீதும் வாய் வைக்கக்கூடும். வளர்த்த விலங்கை வெளியே தள்ளவும் முடியாத அவதி. அப்படியே தள்ளிவிட்டாலும் மோப்பம் பிடித்து வராமலா விடப்போகிறது. இனிக் கவனமாய்த்தானிருக்க வேணும். மனிசி என்ன பேசினாலும் எதிர்வாதம் புரியக்கூடாது. மனக் குழப்பதுடன் வீடு வந்து சேர்ந்தார் மனிதர்.

"வழியிலை முரளியைக் கண்டீங்களா?"

"ஆம்" என்ற பாவனையில் தலையசைத்தார் அவர்.

"சரி, வாருங்கோ சாப்பிட .... சின்னவனும் உங்களுக் காகக் காத்திருக்கிறான்"

சாப்பிட மனமில்லாதவராய் கதிரையில் அமர்ந்திருந்தார் அவர். மறுபடியும் அழைத்தபோது அரை மனதோடு எழுந்துகொண்டார். உணவு தொண்டைக்குள் இறங்க மறுத்து விக்கலெடுத்தது.

மறுபடி ஒருநாள் அவரையும் அது பதம் பார்க்கத் தவறவில்லை. காலில் கடிகாயங்கள். அம்மா பதறினாள். நாய் நன்றியுள்ள மிருகமேயானாலும் அதற்குரிய சில குணங்களை மாற்றமுடியாதென்று அவருக்குப் புரியாம லில்லை. கல்லால் எறிந்தோ, கம்பால் மிரட்டியோ வேடிக்கை பார்க்கும் சிறுவர்களை நினைவு வைத்துக் குரைக்கும் சுபாவம் அதனுடையது.

"நெடுகவும் சங்கிலியில் பிணைத்து வைத்தால் அதுவும் ஓர் அடக்குமுறைதானே.... எங்கள் மீதும் கோபம் வர இது போதாதா....?"

"என்னப்பா யோசிக்கிறியள்? கொஸ்பிற்றலுக்குப் போகயில்லயா?"

"கத்தி வெட்டினதுக்கு ஊசிபோட்டு ஒரு கிழமைதானே ...." என்றார் விரக்தியுடன்.

"இது நாய் விஷமப்பா. இதுக்கு என்ன மருந்தோ தெரியாது. எதற்கும் ஒருக்கால் போய்க் காட்டி வாருங்கோ!"

அவள் கட்டளையிடுவதுபோல் வேண்டுகோள் விடுத்தாள். அவளுக்காக ஒருக்கால் போய்த்தான் வருவோமே என்று புறப்பட்டுப் போனார்.

இரவு முழுவதும் அவருக்குத் தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தார். சாமத்தில் நாய் தொடர்ந்து குரைத்த போதும் ஏனோ அவருக்கு எழுந்து பார்க்கத் தோன்றவில்லை. பின் மனம் கேளாமல் எழுந்து வெளி லைற்றைப் போட்டு ஜன்னலால் எட்டிப் பார்த்தார்.பார்த்த வரின் மனம் துணுக்குற்றது. பாம்பு ஒன்றுடன் அது மல்லுக்கட்டிக்கொண்டிருந்தது. அவசர அவசரமாகக் கதவைத் திறந்தார். மனைவி தடுத்தும் கேளாமல் முற்றத்தில் இறங்கியபோது அதன் குரல் ஈனமாய் ஒலித்து அடங்கியது. முத்திரைப் புடையனும் கவிழ்ந்து கிடந்தது. நன்றிப் பெருக்கால் அவர் கண்கள் கசிந்தன. ■

**ஒன்று நிகழ்வதற்கு முன்பே ஏன் அதைப் பற்றி கவலைப்படுகிறாய்?**

**இரவு பெய்யப் போகும் மழைக்கு எவனாவது பகலில் குடை விரிப்பானா?**



**இந்த உலகில் உள்ள எல்லாவற்றையும் நேசி. பிறருக்காக வாழ். நீ எப்போதும் மகிழ்ச்சி உள்ளவனாக இருப்பாய்.** — தம்மபதம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஊரில் திவ்யா என்ற மிகவும் அழகான அதிக ஆடம்பரமான சொகுசு வாழ்க்கை வாழும் ஒரு பெண் இருந்தார். இவர் காதல் தோல்வியால் நிம்மதி இழந்து வீட்டை விட்டு வெளியே செல்லாமல், நீண்ட நாட்கள் வீட்டிற்குள்ளேயே சிறை வாசம் அனுபவித்தாற்போல் வாழ்ந்து வந்தார். அப்படியே சில காலம் செல்ல, கொஞ்சம் கொஞ்சமாக வெளியே செல்ல ஆரம்பித்து தனது சொந்தக் கம்பெனியில் ஒரு பணியாளராக பணி புரிந்து நாட்களைக் கடத்தி வந்தார் திவ்யா. இருந்தபோதிலும், மனதில் குழப்பங்களும், பிடிக்காத வாழ்க்கையை வாழ வேண்டுமா? என்ற எண்ணமும் அனுதினமும்



# வாழ்க்கையில் மகிழ்ச்சி

## வாழ்க்கையில் எல்லாம் இருந்தும் மனதில் மகிழ்ச்சியும் நிம்மதியும் இல்லாமல் தவித்த கோடீஸ்வர இளம்பெண்ணைக் கதறி அழவைத்த பணிப்பெண்!

திவ்யாவைப் போட்டு வாட்டிக் கொண்டிருக்க, சரி கவுன்சிலிங் செய்பவர்களிடம் சென்று பார்க்கலாம் என முடிவு எடுத்து கவுன்சிலிங் சென்றார். அங்கு, கவுன்சிலிங் செய்பவரிடம், "என் வாழ்க்கை ஒரே சூனியமாக இருக்கிறது.. எவ்வளவு சொத்துக்கள் இருந்தும் வெற்றிடமாக உணர்கிறேன். அர்த்தமே இல்லாமல், இலக்கே இல்லாமல் வாழ்க்கை என்னை இழுக்கிறது. என்னிடம் எல்லாம் இருக்கிறது. இல்லாதது நிம்மதியும், மகிழ்ச்சியும் மட்டுமே. என் சந்தோஷத்திற்கு வழி என்ன சொல் லுங்கள்" என்று திவ்யா கேட்க, கவுன்சிலிங் செய்பவர் அவரின் அலுவலகத்தில் தரையைக் கூட்டிக்கொண்டிருந்த ஒரு பணிப் பெண்ணை அழைக்க, திவ்யா "அவரை ஏன் கூப்பிடுகிறீர்கள் எனக்கு டீ வேண்டாம்" எனக் கூறினார்.

உடனே, கவுன்சிலிங் செய்பவர், "நான் டீ வாங்கி வரக் கூப்பிடவில்லை" என்று கூறிவிட்டு, "திவ்யா, நான் இப்பொழுது பணிப் பெண்ணிடம் எப்படி மகிழ்ச்சியை வரவழைப்பது என்று சொல்லச் சொல்கிறேன்.... நீங்கள் குறுக்கே எதுவும் பேசாமல் கேளுங்கள்" என்றார்.

பணிப் பெண்ணும் துடைப்பத்தைக் கீழே போட்டு விட்டு, ஒரு நாற்காலியில் அமர்ந்து சொல்லத் தொடங்கிய சிறிது நேரத்தில் திவ்யாவின் கண்கள் குளமாகின. பணிப் பெண் கூறியதாவது,

"என் கணவர் மலேரியாவில் இறந்த மூன்றாவது மாதம் என் மகன் விபத்தில் இறந்து போனான். எனக்கு யாரும் இல்லை, எதுவும் இல்லை. என்னால் உறங்க இயலவில்லை. சாப்பிட முடியவில்லை. யாரிடமும் சிரிக்க முடியவில்லை... என் வாழ்க்கையை முடித்துக்கொள்ளலாம் என நினைத்தேன். இப்படி இருக்கையில். ஒரு நாள் நான் வேலை முடிந்து வரும் பொழுது ஒரு பூனை என்னை பின் தொடர்ந்தது. வெளியே சில்லென்று மழை பெய்துகொண்டு இருந்தது. எனக்குப் பூனையைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அதை நான் என் வீட்டில் உள்ளே வர செய்தேன். மிகவும் சில்லென்றிருப்பதால் நான் அதற்குக் குடிக்க கொஞ்சம் பால் கொடுத்தேன். அது அத்தனை பாலையும் குடித்து விட்டு என் கால்களை அழகாக வருடிக்கொடுத்தது.

■ நன்றி : இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கடந்து போன 3 மாதத்தில் நான் முதன் முதலாகப் புன்னகைத்தேன். நான் அப்பொழுது என்னையே கேள்வி கேட்டேன். ஒரு சிறு பூனைக்கு நான் செய்த ஒரு விஷயம் என்னைச் சந்தோஷிக்க வைக்கிறது எனில், ஏன் இதைப் பலருக்குச் செய்து நான் என் மன நிலையை மாற்றிக்கொள்ளக்கூடாது என யோசித்தேன். அடுத்த நாள் நோய் வாய்ப்பட்டிருந்த என் அடுத்த வீட்டு நபருக்கு உண்பதற்குக் கஞ்சி கொடுத்தேன். அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவரை மகிழ வைத்து நான் மகிழ்ந்தேன். இப்படி ஒவ்வொரு நாளும் நான் பலருக்கு உதவி செய்து, அவர்கள் மகிழ நானும் பெரு மகிழ்வுற்றேன்.

இன்று என்னை விட நிம்மதியாக உறங்கவும், உணவை இரசித்து உண்ணவும் யாரேனும் இருக்கிறார்களா? என்பதே சந்தேகம் தான். மகிழ்ச்சி என்பது, அதை மற்றவர்க்குக் கொடுப்பதில் தான் இருக்கிறது என்பதைக் கண்டு கொண்டேன், நான் ஏழை யாக இருந்தாலும் தினமும் நிம்மதியாக உறங்குகிறேன். அதுவே என் வாழ்வின் இறுதி வரை எனக்கு போதும்" என்று கூறி முடித்தார் அந்தப் பணிப் பெண்.

இதைக் கேட்ட திவ்யா, ஓலமிட்டு கத்தி அழுதார். அவளால் காசு கொடுத்து வாங்கக்கூடிய அளவிற்கு எல்லாம் இருந் தது. ஆனால், பணத்தால் வாங்க முடி யாத விஷயம் தன்னிடம் இல்லை என புரிந்து கொண்ட திவ்யா, உடனடியாக 20 ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுத்தார். அலுவலகத்திற்குச் சென்று வந்தவுடன் குழந்தைகளுடன் ஆட்டம், பாட்டம் என விளையாட ஆரம்பித்தார்.

அதன் பின்னர், திவ்யாவின் வாழ்க் கையில் ஒரே சந்தோஷம் தான். நிம்மதியான உறக்கம், மகிழ்ச்சியான வாழ்க்கை என திவ்யாவின் கஷ்டங்கள் காணாமல் போயின. வாழ்க்கையில், எவ்வளவு கஷ்டங்கள் வந்தா லும், தம்மால் முடிந்த உதவியை மற்றவர் களுக்குச் செய்து பாருங்கள். அவர்களின் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சி உங்கள் வாழ்க்கையில் எப்போதுமே இருக்கும். ■

## மரணிக்கும் முன் கடைசியாக சதாம் உசேன் கேட்ட அந்த பொருள் என்ன தெரியுமா..!

நெகிழ வைக்கும் இறுதி நிமிடங்கள்....



பேராபத்தை ஏற்படுத்தும் ஆயுதங்கள் ஈராக்கில் இருப்பதாகக் கூறி சதாம் உசேனை அமெரிக்கா அநி யாயமாகக் கொலை செய்தமையை இந்த உலகம் அறியும். சதாம் தூக்கிலிடப்படும்போது அவர் அருகில் இருந்த அமெரிக்க இராணுவ வீரர் அவரது வாழ்க்கை யின் இறுதி நிமிடங்களைப் பற்றிய தகவலை தற்போது வெளியிட்டுள்ளார்.


ஒரு முஸ்லிமின் வாழ்வு எப்படி இருந்தாலும் அவனது வாழ்வின் இறுதி கட்டம் சிறப்பானதாகவும் இறைவனுக்கு விருப்பம் உள்ளதாகவும் இருப்பது முக்கியம். அதன் அடிப்படையில் சதாம் உசேனின் இறுதி நிமிடங்கள் ஒரு உண்மையான முஸ்லிம் ஒரு வரைப் பிரதிபலிப்பதாக இருந்துள்ளது.

சதாம் உசேனுக்கு மரண தண்டனை நிறைவேற்றப் படுவதற்கு முந்திய தினம் அவரைச் சுற்றி இருந்த காவலர்களில் ஒருவரை அழைத்துள்ளார். அவரிடம் தான் கைது செய்யப்படும்போது அணிந்திருந்த கனத்த அங்கியைத் தருமாறு கேட்டுள்ளார். அதற் குக் காரணம் என்ன? என்று காவலர் கேட்க, "அதிகா லையில் எனது உயிரைப் பறிக்க நீங்கள் முடிவு செய் துள்ளீர்கள். ஆனால், நான் மரணத்தைக் கண்டு பயப் படவும் இல்லை, நடுங்கவும் இல்லை. ஈராக்கில் அதிகாலை நேரம் நடுங்க வைக்கும் குளிரைக் கொண்டிருக்கும். அந்த நேரம் என்னைத் தூக்கு மேடைக்கு நீங்கள் அழைத்துச் செல்லும்போது குளிரி னால் எனது உடல் நடுங்கலாம். அதைப் பார்ப்பவர்கள் சதாம் மரணத்துக்கு அஞ்சக்கூடியவன் என்று எண் ணக் கூடாது. நான் தூக்கு மேடையை நோக்கி நடந்து செல்லும்போது குளிரினால் கூட எனது உடல் நடுங் கக்கூடாது என்று நான் கருதுவதால் என்னைக் குளிரில் இருந்து காக்கும் அந்த கனத்த ஆடையை அணிய விரும்புகிறேன" என கூறியுள்ளார்.

சதாம் உசேன் தூக்கிலிடப்படுவதற்கு முதல் நாள் நள்ளிரவில் தனக்குப் பிடித்தமான கோழி இறைச்சி மற்றும் சாதத்தை மகிழ்ச்சியோடு கேட்டுப் பெற்று சாப்பிட்ட பின்னர் அவரது குழந்தைப் பருவத்தில் இருந்தே வெந்நீரில் தேன் கலந்து குடிக்கும் பழக்கத் துக்கு ஏற்ப அன்று பல கோப்பைகளில் தேன் கலந்து அருந்தியுள்ளார். பிறகு தொழுகை செய்துவிட்டுத் தனது கட்டிலில் அமர்ந்து திருக் குர்ஆனை ஓதியுள் ளார். அவரை தூக்கு மேடையில் ஏற்றப்படுவதற்கு முன்னர் மாவீரனைப் போல் எந்தச் சலனமும் இல்லா மல் மலர்ந்த முகத்துடன் தூக்கு மேடையை நோக்கிச் சென்றுள்ளார். இறுதியில் ஷஹாதத்தை முழங்கிய வாறே தூக்குக் கயிரை அணிந்துள்ளார். எந்தப் பயமும் இல்லாமல் மலர்ந்த முகத்துடன் சதாம் உயிர் பிரிந்தது என்று அந்தக் கடிதத்தில் இராணுவ வீரர் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருத்துவம்

## கோடையில் உடல் வறட்சியடையாமல் தடுப்பது எப்படி?

கோடைகாலம் ஆரம்பித்து விட்டது. வெளியே சென்றாலே அனல்பறக்கும் வெயில் கொளுத்திக் கொண்டிருக்கிறது. இந்தக் கோடைக் காலத்தில் வீட்டின் உள்ளே கூட இருக்க முடியாத அளவில் வெப்பநிலையானது அதிகமாக இருக்கும். பலரது வீடுகளில் கோடை வெயிலின் தாக்கம் தெரியாமல் இருக்க, வீட்டில் 'ஏசி'களைப் போட்டிருப்பார்கள். இருப்பினும் மற்றக் காலங்களை விடக் கோடைகாலத்தில் சற்று அதிகமாக மின்சாரத் துண்டிப்பு ஏற்படும் என்பதால், நிச்சயம் பலருக்கும் அதிகமாக வியர்வை வெளியேறும். ஒருவரது உடலில் இருந்து வியர்வை அதிகமாக வெளியேறினால், உடலில் நீர்ச்சத்தின் அளவு குறைய ஆரம்பிக்கும். நீர்ச்சத்தின் அளவு குறைந்தால், அதுவே பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். அத்தோடு அதிகமாக வியர்த்தால், அது சருமத்தில் அரிப்புக்கள் மற்றும் எரிச்சலை உண்டாக்கும். மனித உடலானது 70% நீரால் ஆனது. எப்போது உடலில் போதுமான அளவு நீர் இல்லையோ, அப்போது உடல் வறட்சி நிலையில் உள்ளது என்று அர்த்தம். இதை ஈடுசெய்ய நீரை அதிகம் குடிக்க வேண்டியிருக்கும். நீர்ச்சத்தின் அளவை அதிகரிக்க பல்வேறு வழிகள் உள்ளன.

**ஜூஸ் குடியுங்கள்:** உங்களுக்கு வெறும் தண்ணீரைக் குடிக்க போர் அடித்தால், அந்த நீரை பழங்களுடன் சேர்த்து ஜூஸ் வடிவில் உட்கொள்ளுங்கள். இப்படிப் பழங்கள் மற்றும் காய்கறிகளைக் கொண்டு ஜூஸ் தயாரித்துக் குடித்தால், உடலில் நீர்ச்சத்து அதிகரிப்பதோடு, விட்டமின்களும், கனிமச் சத்துக்களும் கிடைத்து, உடல் ஆரோக்கியமாக இருக்கும். ஆனால், ஜூஸ் தயாரித்துக் குடிக்கும் போது, அதில் சீனியைச் சேர்க்காமல், தேன் கலந்து கொள்ளுங்கள்.

**இளநீர் குடியுங்கள்:** உடலில் நீர்ச்சத்தை அதிகரிக்கும் ஒரு சிறப்பான பொருள் இளநீர். வெளியிடங்களுக்கு செல்லும் போது, தெருவோரங்களில் இளநீர் விற்கப்பட்டால், அதை அச்சமின்றி வாங்கிப் பருகலாம். இளநீரில் எவ்வித கலப்படமும் இல்லை. மேலும், இளநீரில் எலக்ட்ரோலைட்டுகள் உள்ளதால், இது உடலைப் புத்துணர்ச்சி அடையச் செய்து, உடல் வெப்பத்தைத் தணிக்கும்.

**சலட் சாப்பிடுங்கள்:** காய்கறிகள், வெள்ளரிக்காய், தக்காளி, கீரைகளைக் கொண்டு சலட் தயாரித்து, அதன் மேல் சிறிது எலுமிச்சைச் சாற்றினை ஊற்றிக் கோடை காலத்தில் சாப்பிடுங்கள். இதனால் உடலுக்கு வேண்டிய சத்துக்கள் கிடைப்பதுடன் உடல் வறட்சியடையாமலும் இருக்கும்.

**சூப் குடியுங்கள்:** கோடை காலத்தில் காய்கறிகளால் ஆன சூப்பைக் குடித்தால், உடலுக்குத் தேவையான சத்துகள் கிடைத்து, உடல் நன்கு ஆரோக்கியமாகவும், வறட்சியடையாமலும் இருக்கும்.

**மோர்:** மிகவும் சுவையான, உடல் சூட்டைத் தணிக்கும், உடல் வறட்சியைத் தடுக்கும் அற்புத பானம் தான் மோர். மேலும், மோரில் செரிமான மண்டலத்தில் உணவைச் செரிப்பதற்குத் தேவையான நல்ல பாக்டீரியாக்கள் அதிகம் உள்ளன. அதிலும் மோரில் பச்சை மிளகாய், கறிவேப்பிலை போன்றவற்றைப் போட்டுக் குடித்தால், அந்த மோர் இன்னும் சுவையாக இருக்கும்.

கோடையில் கோப்பி, தேநீர் போன்ற பானங்களை அதிகம் குடிப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில், இது உடலை வறட்சி அடையச் செய்யும். அதிலும் நீங்கள் தினமும் போதுமான நீரைப் பருகி, அதோடு தேநீர் அல்லது கோப்பியையும் அதிகமாகக் குடித்தால் உடலில் நீர்ச் சத்து அதிகரிப்பதற்குப் பதிலாக குறையவே செய்யும். எனவே, கோடையில் கோப்பி மற்றும் தேநீர் அருந்துவதைத் தவிர்த்திடுங்கள்.

தண்ணீரைத் தவறாமல் சீரான இடைவெளியில் குடிக்கும் பழக்கத்தைக் கொள்ளுங்கள். ஏனென்றால், உங்கள் உடலுக்குக் கோடையில் தேவையான அத்தியாவசியமான ஒன்று தண்ணீர். எனவே, அதை மட்டும் குடிக்கத் தவற வேண்டாம். ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கிய மஞ்சரி

ஆரிபோன்





ஓட்டோவில் வந்து
முதியவர்களை எறிந்து விட்டு
செல்லும் இக்காலத்தில்
மனிதாபிமானம் செத்துவிட்டாலும்
மிருகாபிமானம் துளிர்க்கின்றது.

■ ■ ■

அண்மையில் சிக்காக்கோ நகரின் புறுாக் பீல்ட் மிருகக்காட்சிசாலையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று அனைவரையும் நெகிழவும், சிந்திக்கவும் வைத்துள்ளது.

மனிதக் குரங்குகள் இருக்கும் காட்சிக் கூடமொன்றில் சிறுவன் ஒருவன் தவறி விழுந்து விட்டான். அனைவரும் அதிர்ச்சியடைந்து விட்டனர். காவலர்கள் அபாய அறிவிப்பு ஒலியை ஏற்படுத்தி நீர்த்தாரையைப் பீய்ச்சி அடிக்க ஆயத்தமாகினர். இதனால் குரங்குகள் கலவரமடைந்துவிட்டன. அந்த நேரத்தில் ஒரு மனிதக் குரங்கு ஏனைய குரங்குகளைத் தள்ளித் தடுத்துவிட்டு சிறுவனுக்கு அண்மையில் சென்றது.

எல்லோரும் இதயம் உறையப் பார்த்துக் கொண்டிருந்தனர்; காவலர்கள் குரங்கைச் சுட ஆயத்தமாகினர்; ஏற்கனவே இவ்வாறான ஒரு சம்பவத்தில் ஒரு மனிதக்குரங்கு சுடப்பட்டிருந்தது.

கீழே விழுந்த பையன் தொடர்ந்து மயக்கமாகவே இருந்துள்ளான். கிட்டச் சென்ற குரங்கு இரண்டு கைகளாலும் பையனைத் தூக்கியெடுத்து அப்படியே கம்பிகளுக்கு அருகே கொண்டுவந்து உயரத் தூக்கிக் காவலர்களிடம் கொடுத்துவிட்டு மற்றைய குரங்குகளைச் சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றுவிட்டது. பார்த்தோர் எல்லோரின் கண்களிலும் கண்ணீர்.

அண்மையில் மட்டக்களப்பு நகரில் நின்ற ஓட்டோவொன்றின் முதுகில் எழுதப்பட்டிருந்த வாசகம்.

"முட்டிவிடாதே முழுவதும் கடன்"
இரசிக்கவும், சிந்திக்கவும், வைக்கின்றது

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ் சாலையில் சத்துருக்கொண்டான் பகுதியில் வரும் ஆடம்பர வாகனங்கள் மெதுவாகச் செலுத்தப் பட்டுக் குப்பைகளை வீசிவிட்டுச் செல்கின்றன. எவ்வளவு சுத்தமான வீதியை ஏன் அசுத்தம் செய்கின்றார்கள்? யார் குப்பைகள்....?


**"தொண்டன்" சஞ்சிகைக்கு**

**உங்கள் ஆக்கங்களை எழுதுங்கள்...**

- கட்டுரைகள்
- சிறுகதைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- கலை, இலக்கியச் செய்திகள்

பொருத்தமானவை பிரசுரிக்கப்படும்

**தொடர்புகொள்ள:**
"தொண்டன்"
சமூகத் தொடர்பு நிலையம்,
ஆயர் இல்லம்,
மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கத்தோலிக்க திருஅவையின் சமூகப் படிப்பினைகள்


--ஒரு குறும்பார்வை

அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

சென்ற மாத தொடர்ச்சி...

**9. அரசியல் அதிகாரம், கருத்தமைவு, சமூக ஈடுபாடு :**
(Octogesima Adveniens) **மே 14, 1971**

திருச்சபையின் முதலாவது சமூகப் போதனையாகிய 13ம் லியோவால் 1891ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'தொழிலாளர் நிலைமை' என்கின்ற சுற்றுமடலின் 80வது ஆண்டு நிறைவில் திருத்தந்தை 6ம் பவுலால் வெளியீடு செய்யப்பட்டதே இச் சுற்றுமடலாகும். இதன் பிரதான கருப்பொருளாக 'அரசியல் அதிகாரம், கருத்தமைவு, சமூக ஈடுபாடு' போன்றவை காணப்படுகின்றன.





இதற்கு முன்னர் வெளிவந்த சமூக படிப்பினைகள் யாவும் சமூக, பொருளாதார பிரச்சினைகளிலேயே அதிக ஆர்வம் செலுத்தின. ஆனாலும் இம்மடல் அரசியல் அதிகாரமும், சக்திகளும் எவ்வாறு சமூகத்தையும், பொருளாதாரத்தையும் பாதிக்கின்றன என்பதனைக்குறித்து பேசுகின்றது. மேலும் உலகில் முதலாளித்துவம், சமவுடமையென இருவகையான பொருளாதாரங்கள் உள்ளன. இவை எவ்வாறு திருச்சபையின் சமூகப் படிப்பினையுடன் ஒத்துப் பயணிக்க முடியுமென்பதை அலசுவதுடன், இவ்விருவகைப் பொருளாதாரங்களில் காணப்படும் நன்மைகள், தீமைகள் யாவையெனவும் அறிவதுடன் மட்டுமல்லாது அவற்றை கவனமாகக் கையாள்வதுடன், கிறிஸ்தவர்கள் இவற்றிற்கு ஒத்துழைப்பு நல்கும்போது கிறிஸ்தவ நம்பிக்கை சிதைவுறாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டுமென அழைப்பு விடுக்கின்றது.

அத்துடன் வெறுமனே கருத்தளவில் நின்றுவிடாமல் கிறிஸ்தவ செயற்பாட்டுக்கு இம்மடல் அழைப்பு விடுகின்றது (எண். 48). இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடுகின்றபோது எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒரே மாதிரியான செயற்பாட்டில் ஈடுபடுவார்களென எதிர்பார்க்க முடியாது. ஒரே நம்பிக்கையுடைய இரு கிறிஸ்தவர்கள் வெவ்வேறான செயற்பாட்டில் இறங்கலாம். அவ்வாறான நிலைமை நியாயமானதே என எண் 50 கோடிட்டுக் காட்டுகின்றது.

திருஅவையின் சமூக ஈடுபாட்டுப் போதனையை மக்களுக்கு எடுத்துரைப்பதிலும், சமூக செயற்பாட்டினை மக்கள் மத்தியில் ஊக்குவிப்பதிலும் தலத் திருஅவைக்கு காத்திரமான, சிறப்பான பொறுப்புண்டென இவ்வேடு எடுத்துரைக்கின்றது (எண். 4).

**10. கத்தோலிக்க ஆயர்கள் மன்ற போதனை**
**'உலகில் நீதி'** (Justice in the World) **1971**

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கொணர்ந்த சீர்திருத்தங்களுள் ஒன்று இயேசுவின் திருஅவை உலகளாவிய அமைப்பாகும். அதே வேளையில் இத்திருஅவை தலத் திருச்சபைகளில் அதன் ஆயரால் வழிநடத்தப்படுகின்ற அமைப்பாகும். இக்கருத்தின் அடிப்படையில் சங்கத்தின் நிறைவில் வெளியிடப்பட்ட பரிந்துரைகளிலொன்று 'ஆயர் மன்றம்' (Synod of Bishops) அமைப்பது ஆகும். அதனடிப்படையில் திருத்தந்தை 6ம் பவுல் ஆயர் மன்றத்தை நிறுவினார். இந்த ஆயர் மன்றம் வெவ்வேறு தேவைகளுக்காகக் கூடி முடிவுகளை எட்டுகின்றன. இவ்வமர்வுகள் தேவைக்கேற்றவாறு பொதுவானதாகவோ, சிறப்பானதாகவோ, மாநில மட்டத்திலானதாகவோ அமையலாம்.




ஆயர் மன்றத்தின் முதல் அமர்வானது 1967ல் நடைபெற்றது. அதனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொடர்ந்து 1971ல் ஆயர் மன்றம் கூட்டப்பட்டு அதிலே 'உலகில் நீதி' என்கின்ற தொனிப் பொருளில் விவாதங்கள் நடைபெற்று முடிவுகள் எட்டப்பட்டன. அம்மன்றத்தில் 'உலகில் நீதி' என்கின்ற தலைப்பில் எட்டப்பட்ட பிரதான கருத்துக்களாவன:

நற்செய்திப் பணியின் சிறப்பான கூறு "நீதி நிலைநாட்ட உழைப்பது" ஆகும். ஆயர் மன்றத்தின் கூற்றின்படி: "நீதிக்காக உழைப்பதும், உலகை மாற்றியமைப்பதில் ஈடுபடுவதும், நற்செய்தி அறிவிப்பின் இன்றியமையாத உட்கூறாக இருப்பதை நாங்கள் (ஆயர்கள்) நன்கு உணர்கிறோம் (எண் 6). நீதியையும் அன்பையும் நாம் பிரித்தலாகாது. சக மனிதரது மாண்பினை மதிப்பது, அவர்களது உரிமைகளை ஏற்றுக்கொள்வது, அவர்கள் மட்டில் நீதியைக் கடைப்பிடிப்பது, நீதியின் அடித்தளமாகிய அன்பின் வெளிப்பாடாகும். நீதியின் முழுமை அன்பில் தெரிகிறது (எண் 34).

உலகில் நீதியினை நிலைநாட்ட திருஅவை உழைக்க வேண்டும். உலக நீதியினை நிலைநாட்டும் பணியில் திருஅவையானது தன்னிடத்திலும், தனது உள்ளமைப்புக்களிலும் நீதியுடன் நடந்துகொள்ள வேண்டும். நாம் நீதியாக செயற்படுகின்றோம் என்றால், திருஅவையில் எவ்வாறு செயற்படுகின்றோம், எவ்வாறு சொத்துக்களைக் கையாள்கின்றோம், எத்தகைய வாழ்க்கை முறையினைக் கடைப்பிடிக்கின்றோம் என்கின்ற சிந்தனையில் நம்மையே சுயஆய்வுக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும் (எண் 40). திருஅவை சமூகத்திற்குள்ளேயே மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். திருஅவையின் நிர்வாக கட்டமைப்பிலும், செயற்பாட்டிலும், பொதுநிலையினருக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் (எண். 50).

நீதிக்கான கல்வி இன்றியமையாததாகும். தனிமனிதரின் பாவம், சமூகம் முழுவதின் பாவம் ஆகியவற்றை நன்குணர்ந்து மனமாற்றத்திற்கான வழியினைத் தூண்டுவதே உண்மைக் கல்வியாகும். நாம் வாழும் சமூகத்தையும், அதன் மதிப்பீடுகளையும் திறனாய்வு செய்ய நீதிக்கல்வி உதவிடும். நமக்குள் உறங்கிக் கிடக்கும் நமது மனச் சான்றினைத் தட்டியெழுப்பி, நடைமுறையை நன்கு புரிந்துகொள்வதுடன், அதன்படி செயற்படத் தூண்டுவதும், அதனூடாக உலகை மாற்றியமைக்க நமது கல்வி உதவுமாக இருந்தால் அதுவே உண்மையான 'நீதிக்கான கல்வியாக' அமையும் (எண். 51).

**11. இன்றைய உலகில் நற்செய்தி அறிவிப்பு (Evangelii Nuntiandi) டிசம்பர் 8, 1975**




1974ம் ஆண்டில் ஆயர் மன்றப் பேரவை ஒன்று திருத்தந்தை 6ம் பவுலால் கூட்டப்பட்டது. அம்மன்றத்தின் நிறைவில் அதன் பரிந்துரைகளை உள்வாங்கிக்கொண்டு திருத்தந்தை 6ம் பவுல் 'இன்றைய உலகில் நற்செய்தி அறிவிப்பு' என்கின்ற போதனை ஏட்டினை மறைத்தூது அறிக்கையாக 1975ம் ஆண்டில் வெளிக்கொணர்ந்தார். இதிலே தொடக்கவுரையும், நிறைவுரையும் உள்ளடங்கலாக மொத்தம் ஒன்பது பிரிவுகள் காணப்படுகின்றன.

முதல் நற்செய்தி அறிவிப்பாளராக விளங்கிய இயேசுவே நற்செய்தியாகவும் விளங்கினார் (எண்.7). இறையரசினை அறிவித்த இயேசு தமது வார்த்தையினாலும், தாம் ஆற்றிய அருஞ்செயல்களாலும் அதனை நன்கு புரிய வைத்தார். இப்பணியினை தொடர்ந்தாற்றுவது திருஅவையின் பணியாகும். நற்செய்தி அறிவிப்பில் ஈடுபடுகின்ற திருஅவை முதலில் நற்செய்தி மனப்பான்மையில் தோய்ந்திருக்க வேண்டும் (எண்.15). மனித முன்னேற்றம், வளர்ச்சி, விடுதலை ஆகியவற்றிற்கும் நற்செய்திக்கும் இடையில் பிரிக்க முடியாத மிக நெருக்கமான பிணைப்புக்கள் உண்டு (எண். 30, 31).

சமூக அக்கறை தொடரும் ...


"நம்முடைய எண்ணங்களையும் கூடக் கடவுள் அறிவார் என்பதை நாம் உணர்ந்துவிட்டால், அந்த விநாடி முதல் நமக்கு விடுதலை தான்" - மகாத்மா காந்தி

"பிழையை எடுத்துக்காட்டாமல் விடுவது, அறிவுத் துறையிலேயே ஒழுக்கமின்மையை ஆதரிப்பதாகும்" - கார்ல் மார்க்ஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இதுதான்டா அரசியல்

## ஓ! ஜெருசலேமே!

**கடந்த இதழ் தொடர்ச்சி ....**

இவை எல்லாம் நடைபெற்று இரு தசாப்தங்களின் பின்னர், தமாஸ்கு ஆரம் இன் ஹேசெயல் என்பவன் ஜெருசலேமைக் கைப்பற்றினான். விவிலியத்தின்படிக்கு யூதாவின் ஜெகொஷ் ஜெருசலேமின் செல்வங்கள் அனைத்தையும் காணிக்கையாகக் கொடுத்தாலும் ஹேசெயல் நகரத்தின் மக்களது இளவரசர்களையெல்லாம் அழித்து ஒழிக்கச் செய்தான். அரை நூற்றாண்டுகளின் பின், 'இஸ்ராயேலின் ஜெகோஷ்' ஜெருசலேமின் மதில் சுவரைத் தகர்த்து யூதாவின் அமாவியாவைக் கைது பண்ணினான்.

முதலாவது ஜெருசலேம் தேவாலயத்துக்கான காலகட்டத்தில் ஜெருசலேமே தனி யாத்திரை மையமாக இவ்விராச்சியம் பூராகத் திகழ்ந்திருக்கிறது.

**ஆசிரிய மற்றும் பபிலோனிய சாம்ராஜ்யங்கள்:**

யூதா அரசனின் இராச்சியத்தின் தலைநகரமாக ஜெருசலேம் சுமார் 400 ஆண்டுகள் திகழ்ந்திருந்தது. கிறிஸ்துவுக்கு முன் 701 ஆம் ஆண்டளவில் அது ஆசிரிய மன்னன் செனசெரிப்பின் படையெடுப்பை தாக்குப் பிடித்திருந்தது. இதற்கு 20 ஆண்டுகளுக்கு முன் வட யூதாவின் தலைநகரமான சமாரியாவால் அது சாத்தியப்படாமற் போயிற்று. அது வீழ்ச்சியுற்றிருந்தது. ஜெருசலேம் மீதான செனசெரிப்பின் படையெடுப்பின்போது ஒரு அதிசயம் குறிப்பிடப்படுகின்றது. அது விவிலியத்திலும் பதிவாகியிருக்கின்றது. அதாவது இறைவனின் தூதன் விண்ணிலிருந்து இறங்கி செனசெரிப்பின் படைவீரர்களுள் 185,000 பேரைக் கொன்றதாக அந்த வரலாறு குறிப்பிடுகின்றது. அதே வேளை இதே செனசெரிப்பின் வார்த்தையில், 'யூதாவின் அரசன் ஹெசெக்கியா "கூட்டுக்குள் அடைபட்ட பறவையாக அகப்பட்டுக் கொண்டான்"' என்று கூறப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்லாமல் செனசெரிப் அந்த முற்றுகையை நீக்கிக் கொள்ள பெருமளவு பொக்கிஷத்தை, அதாவது, 30 தாலந்து தங்கம், 800 தாலந்து வெள்ளி மற்றும் ஏராளமானவற்றை அளித்திருந்தான் என்றும் அறியக் கிடக்கின்றது. எனினும் கி.மு. 597 அளவில் பாபிலோனியர்களின் முற்றுகையை அடுத்து ஜெருசலேம் அவர்களால் கைப்பற்றப்பட்டது. இளம் அரசன் 'யெகோயாச்சின்' பாபிலோனியர்களால் சிறைப்படுத்தப்பட்டான். அவனோடு அதிகார வர்க்கத்தினர், உயர் மட்டத்தினர் பெருமளவானோரும் சிறைப்படுத்தப்பட்டனர். பாபிலோனியர்களின் சக்தி மிக்க அரசனாக அமைந்த நெபுக்கத்நெசார் 'ஸெடேக்கிளா' என்பவனை அரச கட்டிலில் அமர வைத்தான். ஆனால் கி.மு. 587-586 ஆண்டு வாக்கில் அவன் நெபுக்கத்நெசாருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தமையால் கோபங்கொண்ட நெபுக்கத்நெசார் அரசன் மீண்டும் ஜெருசலேமைக் கைப்பற்றி ஸெடேக்கிளாவின் வழித்தோன்றல்கள் என்று கருதப்பட்ட எல்லோரையும் அவன் கண்முன்னே கொன்றொழித்ததுமில்லாமல், அதுவே அவன் கண்கள் இவ்வுலகில் கடைசியாகக் கண்ட காட்சியாக அமையட்டும் என்று சொல்லி அவன் கண்களையும் பிடுங்கிப்போட்டான். அதோடு திருப்தியடையாமல் அவனையும், யூதாவின் முக்கியஸ்தர்களையும் கைதிகளாக்கிக் கொண்டனர் பாபிலோனியர்கள். ஜெருசலேம் ஆலயத்தை எரித்தும், அதன் சுற்று மதில்களையெல்லாம் தகர்த்தும் வெறியாட்டம் போட்டனர். பிறகு தங்களைச் சார்ந்த அசிக்கத்தின் கெதலியா என்பவனை அங்கே ஆளுநராக நியமித்தனர்.

52 நாள் ஆட்சியின் பின்னர், ஸெடேக்கிளாவின் எஞ்சியிருந்த வழித்தோன்றல் நெத்தானியாவின் மகன் யிக்ஷமாயில், அம்மன் அரசன் பாலிசின் தூண்டுதலால் ஆளுநன் கெதலியாவைச் சூழ்ச்சியால் கொன்றான். இதனால் அச்சம் அடைந்த யூதாவின் மக்கள் தொகையில் பலரும் நெபுக்கத்நெசாருடைய கோபத்திற்கஞ்சி எகிப்திற்கு ஓடிப் போனார்கள்.

**பேர்சிய சாம்ராஜ்ய கால கட்டம்:**

பேர்சிய கால கட்டத்தில் புழக்கத்தில் இருந்த யூதேயாவின் வெள்ளியாகிய யெகுட் நாணயம் ஒரு பக்கத்தில் அரெமெய்க் எழுத்தில் யூதேயா என்ற குறிப்பையும், மறு பக்கத்தில் ஜெருசலேமைக் குறிக்கும் லில்லி மலரையும் கொண்டிருந்தது.

விவிலியத்தின்படிக்கு, சிலசமயம் சைரஸ் சிலிண்டர் என்பவனின் ஆவணங்களின்படிக்கு (என்று கூடக் கொள்ள முடியும்), பாபிலோனில் பல தசாப்த அடிமைத்தனத்தின் பின்னர், பேர்சியர்களின் பாபிலோனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கடைக்கணக்கு

**குறுங்கதை - 88**

அலுவலக உணவு வேளையின்போது அன்ரனும், நண்பர்களும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். பெற்றோல், டீசல், மண்ணெண்ணைய் விலையுயர்வு தொடர்பாகவும், வாழ்க்கைச் செலவு பற்றியும் கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

தணிகாசலம் அன்ரனிடம் கேட்டார்.... "மச்சான் உங்களுக்கு கடைகளில எக்கவுன்ட் இருக்கா....?"

"இல்ல .... கையில இருக்கிற காசக் கொண்டு சமாளிக்கிறனான்.... கடையில கணக்குக்கு சாமான் எடுக்கிறன்டா பயம்தான்....."

"ஏன் பயம்....?" என்று இஸ்மாயில் கேட்டார்.

"கடையில கணக்குக்கு, சாமான் துண்டோட போனா சில சிக்கல்கள அனுபவிச்சிருக்கன் .... லிஸ்ரில நாலு சாமான்கள்ட பேர்தான் இருக்கும்..... ஆனா கடைக்குப்போனா இன்னும் எட்டுச் சாமான்கள வாங்க வேணும்போல இருக்கும். அதுவும் அவசியம் போலத் தான் இருக்கும்..... காசுக்கு வாங்கப் போனால் இருக்கிற காசுக்கு அளவாத் தான் சாமான்கள வாங்குவம் .... இல்லாட்டி மாசக் கடைசியில கணக்கு எகிறிடும்.... பிறகு ஈடுவச்சுத்தான் கணக்கு முடிக்க வேண்டிவரும்...."

உடனே இஸ்மாயில் சொன்னார்,

"அப்பிடியோ உண்மை .... இதிலும் பார்க்க 'சுப்பர்மார்க்கட்டுகளுக்கு' போனா அவஸ்த இன்னும் கூட. சொக்க-லெட், இனிப்பு, விளையாட்டு சாமான்கள எல்லாம் முன்னுக்கு, சின்னாக்கள்ற கையில எட்டுறமாதிரி வைச்சிருப்பானுக... சின்னப்பிள்ளைகளோட சுப்ப மார்க்கட் டுக்குப் போனா அதோகதிதான்....."

ஆழ்ந்த சிந்தனையுடன் தணிகாசலம் தலையாட்டினார். ✷

முறியடிப்பையடுத்து, பேர்சியாவின் இரண்டாம் சைரஸ் என்பவன் யூதர்கள் யூதாவுக்குத் திரும்பவும், தேவாலயத்தை மீளக் கட்டி எழுப்பவும் அனுமதித்தான். எஸ்ரா – நெகேமியா நூலின் பிரகாரம், இந்த இரண்டாவது தேவாலயக் கட்டுமானப் பணிகள் மாமன்னன் டாரியுசின் ஆட்சியின் ஆறாவது ஆண்டில் (கி.மு. 561 ஆவது ஆண்டு) நிறைவடைந்தன என்று அறியக் கிடக்கின்றது. அது முடிவடைந்த பின்னர், முதலாம் ஆர்ட்டாக்ஸெர்செஸ் என்பவன் எஸ்ராவையும், நெகேமியாவையும் நகரத்தின் சுற்று மதிலைக் கட்டி முடிக்கவும், எபர் – நாரி அளுநருக்குட்பட்டு யெகுட்டை ஆட்சி செய்யவும் அனுப்பி வைத்தான். ஹீப்ரு விவிலியத்தின் இறுதி அத்தியாயங்களில் சரித்திரக் குறிப்புக்களில் இந்த விபரங்கள் பதியப்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில்தான் அரெய்மிக் எழுத்துக்கள் கொண்ட யெகுட் நாணயங்கள் ஜெருசலேமுக்கருகில் வார்க்கப்பட்டன என்று நம்பப்படுகின்றது.

**பண்டைய கிரேக்க கலாச்சார காலகட்டம் (இரண்டாம் தேவாலய காலம்) – கி.மு. நான்காம் முதல் முதலாம் நூற்றாண்டுகள் வரை**

மாவீரன் அலெக்சாந்தர் பேர்சிய இராஜ்யத்தைக் கைப்பற்றின பிறகு, ஜெருசலேமும், யூதேயாவும் கிரேக்கர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததுடன் ஆதிகாலக் கிரேக்க கலாச்சாரத்திற்கும் உட்படலாயின. அலெக்சாந்தரின் எதிர்பாரா மரணத்தின் பின்னர் இடம்பெற்ற 'டயோடொச்சை' யுத்தங்களின் முடிவில், ஜெருசலேமும், யூதேயாவும் முதலாம் புட்டோலமி என்பவனதும், புட்டோலமியர்களதும் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. யெகுட் நாணயம் தொடர்ந்தும் புழக்கத்தில் இருந்து கொண்டேயிருந்தது. கி.மு. 198 இல் ஐந்தாவது புட்டோலமியனின் 'பானியும்' யுத்தகள தோல்வியையடுத்து ஜெருசலேமும், யூதேயாவும் மாவீரன் அந்தியோக்குவின் ஆதிக்கத்துள் வந்தன.

- தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் வெற்றி பெற

## எண்ணங்கள் தெளிவானதாக இருக்க வேண்டும்!

மனிதன் தனிமையிலே எதைச் சிந்திக்கிறானோ அதுதான் அவன் குணமாக இருக்கும் என்பது மனோதத்துவ இயலாளர்களின் கருத்து. படிக்கும் மாணவர்கள், இளைஞர்கள் என ஒவ்வொருவரும் தாங்கள் சிந்திக்கும் விதத்தாலேதான் வெற்றி அடைகிறார்கள்.

மனிதன் தன் வாழ்வில் இலட்சத்திற்கும் மேற்பட்ட எண்ணங்களைக் கொண்டிருக்கிறான். மனிதனின் சிந்தனை இடத்திற்குத் தகுந்த வாறும், வயதிற்கு ஏற்றவாறும் மாறுகிறது. சிந்தனைகள் பெரும்பாலும் இப்படி நடந்தால்? அல்லது இப்படி நடக்க வேண்டும் என்பன போன்றதாகவே இருக்கிறது.

சிறுவன் சிந்தனை செய்யும்பொழுது அவனுக்கு உலகம் தெரிவதில்லை. பல விஷயங்களும் புரிவதில்லை. ஆகையால், சிறுவனின் சிந்தனைகளானது கற்பனைக்கு எட்டாத ஒன்றை மையமாக வைத்துப் பறந்து விரிகிறது.

ஒரு பருவ வயது மாணவன் சிந்திக்கும் பொழுது, அவன் தனது படிப்பு, தான் நாயகனாக நினைக்கும் மனிதர், தனது இலட்சியக் கனவு எனத் தான் படித்த பாடங்கள், கதைகள், திரைப்படங்கள் போன்றவற்றை அடிப்படையாக வைத்துச் சிந்தனைகளை விரிவுபடுத்துகிறான்.

பாடசாலை வாழ்க்கையை முடித்து பல்கலைக்கழகத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் ஒருவன் கல்வி குறித்த குழப்பங்களுடனும், தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற அதீத தன்னம்பிக்கையுடனான எண்ணங்களைக் கொண்டு அவனது சிந்தனைகள் அமைகின்றன.

பல்கலைக்கழகப் படிப்பை முடித்த இளைஞனுக்கு வேலை வாய்ப்பு, எதிர்காலம்



- ஜே. எச். இரத்தினராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பயம் நிறைந்த சிந்தனைகளும், தன்னைச் சார்ந்தவர்கள், தனது பொறுப்புகள் குறித்த கவலைகளே அவன் சிந்தனையில் வெளிப்படுகின்றன.

இது போன்ற சிந்தனைகள் ஒரு சாதாரண மனிதன் சிந்திப்பதாகும். ஆனால், இது போன்ற சிந்தனைகளைத் தவிர்த்து மாறுபட்டுச் சிந்திப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களை முக்கியமாக இரு வகைப்படுத்தலாம். முதல் வகையைச் சார்ந்தவர்கள் சாதனையாளர்களாகவும், இரண்டாவது வகையைச் சார்ந்தவர்கள் சமூகத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துபவர்களுமாக மாறுகிறார்கள்.

அடுத்தவருக்குத் துன்பம் விளைவித்து குறுக்கு வழியில் வெற்றியை அடைய வேண்டும், பலனைப் பெற வேண்டும் என நினைப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிறது. இது போன்றவர்களின் எண்ணங்கள் தங்களையும், தங்களைச் சார்ந்தவர்களின் முன்னேற்றத்தையும் விரைவாக, அதே நேரம் பிறர் பாதிப்படைந்தாலும் பரவாயில்லை எனும் நோக்கத்தோடு சிந்தித்து அடைய முயற்சி செய்வதாக இருக்கும். இப்படிச் சிந்திப்பவர்களால்தான் சமூகக் குற்றங்கள் அதிகரிக்கின்றன. மற்றொன்று, இது போன்றவர்கள் தங்கள் எண்ணங்களால் விளைந்த சம்பவங்களால் ஏற்படும் பின் விளைவுகள் குறித்துப் பெரும்பாலும் சிந்திப்பதில்லை.

இரண்டாம் வகையைச் சார்ந்தவர்கள் பொது நலன், தான் என்ன சாதிக்கலாம், தனது இலட்சியங்கள், இவற்றை அடைந்தால் அடையும் நிலை என அனைத்து விதமான செயற்பாடுகள் குறித்தும் சிந்திக்கின்றனர். இவர்கள் சமூகத்தின் வளர்ச்சிக்குத் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்குகின்றனர்.

இன்னும் பல வகைகள் இருக்கின்றன. அவை சிறு சிறு கிளைகளாகப் பரந்து விரியும். நமக்கு மிகவும் முக்கியமானது சிந்தனைகள் நல்லவிதமாக இருக்க வேண்டும். அதன் பயனாய் நன்மைகள் நிறைவாகக் கிடைக்க வேண்டும் என்பதுதான். பாடசாலை, கல்லூரி மாணவர்களை எடுத்துக்கொண்டால் தங்கள் சிந்தனைகளைக் கட்டுப்பாட்டில் வைக்காததாலேயே வகுப்பில் கவனத்தைச் சிதறவிடுகின்றனர்.

பாடம் படிக்கும்பொழுது எண்ணங்களை அலைபாயவிடுவதனால் பாடத்தைப் படிக்க முடியாத சூழ்நிலைக்கும், நினைவில் வைக்க முடியாத நிலைக்கும் தள்ளப்படுகின்றனர். வீணான எண்ணங்களால் பொழுதுகள் கடந்து போகுமே தவிர, தேவையான செயல்பாடுகள் நடைபெறாது.

எண்ணங்களைக் கட்டுப்பாட்டில் வைப்பதற்கு முதலில் நமக்குத் தற்போது எது தேவை? எதிர்காலத்திற்கு என்ன தேவை? அவசரமும், அவசியமுமானது என்ன? என முதலில் கண்டு கொள்ளுங்கள். தேவை இல்லாத சிந்தனைகளால் அப்போதைக்கு நன்றாக இருப்பது போன்று தோன்றினாலும், பெரும் மதிப்புள்ள காலத்தை வீணாக்கித்தான் தேவை இல்லாத சிந்தனைகள் தன்னை ஆக்கிரமிக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

தங்களின் தற்போதைய தேவை பாடம் படிப்பது என்றால், பாடத்தை எப்படிப் படிப்பது என்று மட்டுமே சிந்தியுங்கள். வகுப்பில் இருந்தால் எதைப்பற்றிய சிந்தனைகளும் தேவையில்லை என்பதை உணர்ந்து, பாடத்தை மட்டுமே நினையுங்கள். தொடர்ந்து நினைக்க, நினைக்க அச்சிந்தனைகள் உங்களில் வலுப்படுத்தப்பட்டு உங்களை படிப்பின் மேல் ஈடுபாடு உள்ளவராக மாற்றும்.

தங்கள் சிந்தனைகளால் ஏதேனும் செயல்பாடு நடக்குமா? நடந்தால் அது நல்ல பயன்களை உருவாக்குமா? அல்லது காலத்தை வீணாக்குமா? என உங்களுக்குள்ளேயே கேள்விகள் கேட்டு சிந்தனையில் தெளிவுகண்டு வாழ்க்கையில் வெற்றி காணுங்கள். வாழ்த்துக்கள். ■

**ஓடி ஓடிப் பிழையாக கோடியைச் சேர்த்து**
**தமக்கு தமக்கு என்று வாழ்வது வீணே**
**செய்தொழிலே தெய்வம் என வியர்வை சிந்தி**
**நேர்மையுடன் உழைத்து தருமம் செய்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பைந்தமிழ்க்குமரன் டேவிட்

எறும்புகள் ஊர்கின்றன
மழை வரப்போகுது

எந்த எறும்புகளும் தமது வீடுகளை
பூட்டிக்கொண்டு வரவில்லை
அகலத் திறந்தபடி கிடக்கின்றன
எறும்புகளுக்கு
தம் வீடுகள் மேல் கவலையில்லை
இயலுமானவரை இழுத்திழுத்துப்போய்
சேர்த்துவைக்கும் சேதாரமற்ற உணவுத்துகள்கள்
யார் கொண்டு வந்தார்
யார் உண்பார்
அவைகளுக்கு அப்பாற்பட்ட வினாக்களிவை

புறப்படும் வேளை
மனிதரைப் போல
அலுமாரி பூட்டி
அடுப்படியில் பதுக்கி
கதவு பூட்டி
கைப்பையில் சாவி போட்டு
அடிக்கொரு தடவை
தொட்டுப் பார்க்கும் பழக்கம்
எறும்புகளிடம் இல்லை.
எறும்பு வீடுகள் இயல்பானவை
உணவைச் சேர்க்கவும்
உறங்கி வாழவும் போதுமானவை
மனிதரைப் போல மடிவீடு கட்டி
மாபிள்தரை அமைத்து
கண்ணாடி பொருத்தி
கதவு யன்னல் திரைகளிட்டு
சொகுசான சோபாக்களிட்டு
பட்டுமெத்தைக் கட்டில்களில்
உலகமுள்ளளவும் உய்த்துவாழ வந்தவன்போல்
கற்பனையில் வாழாத சித்தெறும்பு வீடுகள்

அதிகாரம் இல்லை ஆணவமும் அங்கில்லை
சுறுசுறுப்பும் சுத்தமும்
சுகமான வாழ்வதும்
கற்றுத்தரும் பாடம் கேட்க
மனிதனுக்கும் நேரமில்லை.

## தொண்டன் சஞ்சிகை இல்லங்கள் தோறும் செல்ல உதவும் நெஞ்சங்கள்

**பேராலயப் பங்கு - 70 பிரதிகள்**
திருமதி. அருளானந்தம்
திருமதி. ரவிச்சந்திரராஜ்
செல்வி. மரினா
அருட்சகோதரர். கனிசியஸ்
திரு. உதயராஜ்
செல்வி. ஜெயந்தி ஜெபமாலை

**தன்னாமுனைப் பங்கு - 46**
திருமதி. P. அல்பிரட்
செல்வி. மெலோனா
அருட்தந்தை G. அம்புறோஸ்

**கல்முனைப் பங்கு - 35**
திருமதி. ரெஜினா டிலைல்

**பனிச்சையடிப் பங்கு - 33**
திருமதி. குளோடியா பாத்லட்
திருமதி. A. அருள்ராசா

**புளியடிக்குடாப் பங்கு - 28**
திரு. J. பிரெடி செலர்

**அமிர்தகழி-பாலமீன்மடுப் பங்கு - 28**
திருமதி. K. எலிசபெத்
செல்வி. A. கமலநாதன்

**திருக்கோவில் பங்கு - 20**
திருமதி. Y. ஆதிநாயகம்

**தேற்றாத்தீவுப் பங்கு - 20**
திருமதி. Y. அலோஷியஸ்
திருமதி. A. பாக்கியநாதன்

**சகாயபுரப் பங்கு - 16**
திருமதி. J. பள்தசார்
திருமதி. K. சபானந்தம்

**வீச்சுக்கல்முனைப் பங்கு - 15**
திருமதி.M. ஆஞ்சலா

**கல்லாற்றுப் பங்கு - 15**
திருமதி. அற்புதமணி

**வாழைச்சேனைப் பங்கு - 15**
திரு. G. ஜோய் பிரகாஷ்
திரு. சிவலிங்கம் ஷங்கர்

**மாங்கேணிப் பங்கு - 15**
மரியாயின் சேனை

**தாண்டவன்வெளிப் பங்கு - 15**
திருமதி.T.M. ஜேசுராஜா
திருமதி.S. அழகுசவுந்தரி

**அக்கரைப்பற்றுப் பங்கு - 12**
திரு. றொபின்

**டச்பார்-கல்லடி பங்கு - 10**
திரு. கொஸ்மஸ் றாகல்

**இருதயபுரப் பங்கு - 10**
திரு. எட்வர்ட் சாள்ஸ்

**நாவற்குடாப் பங்கு - 10**
திரு. இராஜேந்திரன்

**அலிகம்பைப் பங்கு - 10**
திருமதி.A. நிலுசாஜினி

**செங்கலடிப் பங்கு - 05**
திருமதி. ஸ்கொலஸ்டியா

**பாடசாலைகள்**

மட்/புனித சிசிலியா மகளிர் வித்தியாலயம் - தேசிய பாடசாலை
திருமதி. மேரி மதி ஜெயநாத்
**25 பிரதிகள்**

மட்/புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை
திருமதி. S.M. F. ஜூட்
**17 பிரதிகள்**

கல்/திருச்சிலுவை வித்தியாலயம் -
செல்வன். S. பிரதீபன்
**10 பிரதிகள்**

திருக்குடும்ப கன்னியர் இல்லம், மட்டக்களப்பு
அருட்சகோதரி. அனற் H.F
**25 பிரதிகள்**

**ஆயர் இல்லம் - 06 பிரதிகள்**

**அனைவருக்கும் எமது நன்றிகள்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :
திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்
142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு.
தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 03

1) புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவேண்டிய இலங்கையின் இரு அமலமரித் தியாகிகளின் பெயர்களைத் தருக?

........................................................................................................

2) "அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்" எனும் திருவசனம் உள்ள திருவிவிலிய இலக்கத்தைத் தருக:

........................................................................................................

3) நிசான் (சித்திரை) மாதம் 14ம் திகதி இஸ்ரயேல் மக்கள் கொண்டாடிய விழா எது?

........................................................................................................

4) ஒரு புகழ்பெற்ற சிற்பியால் ஆரம்பிக்கப்பட்டு, வானதூதர்களால் நிறைவுசெய்யப்பட்ட தூய கன்னிமரியாவின் திருவுருவச் சிலையின் பெயர் என்ன?

........................................................................................................

5) நீரிழிவு மற்றும் கார்போஹைட்ரேட்டைக் குறைக்கும் ஆற்றல் கொண்டது எது?

........................................................................................................

6) ஆறே நாள் யுத்தத்தில் அரபுநாடுகளை இஸ்ரயேல் யாருடைய வழிகாட்டலில் தோற்கடித்தது ?

........................................................................................................

7) அரசின் உதவிபெறும் அனைத்துக் கத்தோலிக்கப் பாடசாலைகளும் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்ட வருடம் எது?

........................................................................................................

8) 1931.05.15 அன்று "சமூக ஒருங்கமைப்பு" எனும் சுற்றுமடலை வெளியிட்ட திருத்தந்தையின் பெயர் என்ன?

........................................................................................................

9) புனித யூலோஜியஸ் எங்கு அருட்பொழிவைப் பெற்றார்?

........................................................................................................

10) திருத்தந்தை 13ம் லீயோ வெளியிட்ட "தொழிலாளரின் நிலைமை" எனும் சுற்றுமடல் எப்போது வெளியிடப்பட்டது?

........................................................................................................

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................


..............................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**

வினாவிடைப் போட்டி - 03
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### காகிதப் புலி:

தன்னை விமர்சித்து வந்த மொட்டைக் கடிதத்தால் மனமொடிந்து போயிருந்த அந்த மனிதரை உலுக்கியது, அவருடைய ஐந்து வயது மகனின் அழுகுரல். தன் பாடப் புத்தகத்தில் இருக்கும் புலியின் படத்தைப் பார்த்துப் பயந்து அதைப் பிரிக்க மாட்டேன் என்று அழுது கொண்டிருந்தான் அந்தச் சிறுவன், "அது காகிதப்புலி! கவலைப்படாதே, உன்னை ஒன்றும் செய்யாது" என்று ஆறுதல் கூறியபோதே அவருக்கொன்று தோன்றியது. தன்னைப் பற்றிய அனாமதேயக் கடிதம் கூட காகிதப்புலிதான். அதற்காகவா மனமொவது. உடனே கிழித்தெறிந்தார் காகிதத்தையும், கவலையையும்.

### பலவற்றையும் பிடிக்க நினைத்தால்....

ஒரு நேரத்தில் ஒன்றை மட்டும் சொல்லித்தந்த குருநாதர் மேல் சீடனுக்குக் கோபம். தன் நேரம் விரைவதாய் வருந்தினான். கூண்டில் அடைக்கப்பட்ட பத்துக் கோழிகளைத் திறந்துவிட்ட குருநாதர் பத்தையும் பிடிக்கச் சொன்னார். பத்தும், பத்துத் திசைகளில் ஓடின. துரத்தித் துரத்திக் களைத்தான். கழுத்தில் சிகப்பு நாடா கட்டப்பட்ட கோழியை மட்டும் பிடிக்கச் சொன்னார் குருநாதர். சில நிமிடங்களிலேயே பிடித்தான். குருநாதர் சொன்னார், "ஒரு நேரத்தில் ஒன்றை மட்டும் பின்பற்று. பலவற்றையும் பிடிக்க நினைத்தால் எல்லாவற்றையும் இழந்து நிற்பாய்"

- ஜே.எம்.இரத்தினராஜா -

## முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி



கொழும்பு சாஹிராக் கல்லூரியிலே தலைமைத் தமிழ் ஆசிரியராக இருபத்தெட்டு ஆண்டுகள் இருந்து இலங்கை முஸ்லிம் மக்கள் மத்தியிலே தமிழார்வத்தை வளர்த்தவர், ஆங்கில நாகரிகத்தில் அக்காலத்தில் திளைத்த கொழும்புத் தமிழரிடையே தமிழ் உணர்ச்சிளை ஊட்டியவர், முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பியெனின் அது மிகையன்று. இலங்கையிலே இஸ்லாமிய இலக்கியங்களைப் பற்றியும், அவற்றின் தத்துவங்களைப் பற்றியும் அறிந்த தமிழ்மகன் அவர்தான். சிறுவர்க்கேற்ற இனிய, எளிய பாடல்கள் இயற்றுவதில் ஆற்றல் வாய்ந்தவர் புலவரவர்கள். இலங்கைச் சுதந்திர விழாவை முன்னிட்டு நடைபெற்ற "மரதன்" தமிழ்ப் பாடற் போட்டியிலே முதற் பரிசு பெற்றமை அவரது புகழை உயர்த்தியது. தாகூர் காணும் தோட்டி, ஆய் அண்டிரனும் ஓடை கிழாரும், பாவலன் பாரதி, சீதனச் சிந்து, பொன் பெற்ற துறவி முதலிய அவரது கவிதைகள் பிரசித்தமானவை. சங்கநூலாராய்ச்சி கைவரப் பெற்ற இப்பெரியார் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே சிறிது காலம் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். அவர் எழுதிய கவிதைக் கடிதங்கள் மிகச் சுவையுள்ளன. சிறார் உளப் பாங்குக்கேற்ப அவர் எழுதிய கவிதைக் கடிதங்கள் மிகச் சுவையுள்ளன. சிறார் உளப் பாங்குக்கேற்ப அவர் எழுதிய "ஈழவாசக" வாசிப்புப் புத்தகங்களும், "மொழிப் பயிற்சி" நூல்களும் உயர்தரமானவை. இவருடைய ஆற்றலைத் தென்னிந்தியாவும், இலங்கையும் போற்றிக் கௌரவித்தன. பரந்த நோக்கமும், உயர்ந்த இலட்சியமுங் கொண்டு எளிய வாழ்க்கை வாழ்ந்த "நல்லதம்பிப் பாவலன்" எல்லோரதும் இனிய நண்பர்; நன்றி மறவாத நல்லியல்புடையவர்; வெகு அடக்கமானவர். சொற்களைக் கொண்டு அம்மானை ஆடும் இக்காலக் கவிதை உலகைப் பார்க்கும்போது அவர் நினைவு தமிழ் பேசும் மக்களிடை உதித்தே தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

தரம் : 11 பகுதி – *II* கத்தோலிக்கத் திருமறை நேரம்: 3 மணித்தியாலங்கள்

போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

**சுருக்கமான விடை தருக :**

**01.** அ) கபிரியேல் தூதர் திருமுழுக்கு யோவானின் பிறப்புப் பற்றி அறிவித்த வேளையில் அவரைப் பற்றிக் கூறப்பட்ட விடயங்கள் எவை?

ஆ). திருமுழுக்கு யோவானின் போதனையின்போது மக்கள் கூட்டத்தினருக்கும், வரி தண்டுபவர்களுக்கும், படைவீரர்களுக்கும் கூறிய அறிவுரை யாது?

இ) திருமுழுக்கு யோவானின் மரணத்திற்குப் பிரதான காரணம் என்ன?

**02.** அ) இயேசுவை அலகை மூன்றாம் முறை சோதித்ததற்கு இயேசு அளித்த பதில் என்ன?

ஆ) இயேசு செய்த நான்கு வகை புதுமைகளும் எவை?

இ) இயேசு செய்த புதுமைகளூடாக வெளிப்படுத்தப்படுபவை யாவை?

**03.** புதுமைகள் இடம்பெறுவதற்கு "நம்பிக்கை" அவசியமாகும். இவற்றுக்கமைவாகப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ) இயேசு எரிக்கோவில் பார்வையற்று இருந்தவருக்குக் கூறியது என்ன?

ஆ) இரத்தப்போக்குடைய பெண்ணுக்கு இயேசு கூறியது என்ன?

04. அ) விதைப்பவன் உவமையில் வரும் நான்கு வகை நிலங்களிலும் விழுந்த விதைகளுக்கு நடந்தவைகளைப் பின்வருவனவற்றின் அடிப்படையில் தருக:

1. வழியோரம் விழுந்த விதைகள் :
2. மண் இல்லாத பாறைப் பகுதியில் விழுந்த விதைகள்:
3. முட் செடிகளின் இடையே விழுந்த விதைகள் :
4. நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் :

விடைகள் மறுபக்கத்தில் ....

## பொது அறிவு

### நகரங்களின் சாட்டுப்பெயர்கள் சில....

கனவுக் கோபுரம் - ஒக்ஸ்போர்ட் (இங்கிலாந்து)
அழியா நகரம் - உரோம் (இத்தாலி)
ஏழு குன்றுகளின் நகரம் - உரோம் (இத்தாலி)
பொற்கதவுகளின் நகரம் - சான் பிரான்சிஸ்கோ (அமெரிக்கா)
பேரரசு நகரம் - நியூயோர்க் (அமெரிக்கா)
தடைசெய்யப்பட்ட நகரம் - லாசா (திபெத்)
புயலடிக்கும் நகரம் - சிகாகோ (அமெரிக்கா)
கருங்கல் நகரம் - அபர்தீன் (ஸ்கொட்லாந்து)
உலகின் தாய் - கெய்ரோ (எகிப்து)
வெள்ளை நகரம் - பெல்கிரேடு (யூகொஸ்லாவியா)
வானளாவிய கட்டட நகரம் - நியூயோர்க் (அமெரிக்கா)
தோட்ட நகரம் - சிகாகோ



## வினா விடைப் போட்டி - இல 01

**சரியான விடைகள்**

1. டிசம்பர் 7, 1965
2. ஹெலிகான் கன்னிமரியாளின் துறவற இல்லத்தில்
3. நோலா நகர் புனித பெலிக்ஸ்
4. உரோமைக் கடவுளைக் குறிக்கும்
5. 1946ம் வருடம்
6. மகிழ்வின் நற்செய்தி
7. சீராக் 3:17
8. பேரருட் கலாநிதி. மேதகு பிடெலிஸ் லயனல் இமானுவல் பெர்னாண்டோ
9. நேப்பிள்ஸ்
10. நீதிமொழிகள் 23:13

**சரியான விடை எழுதி 500/= பரிசு பெறும் அதிர்டசாலிகள்**

திருமதி. M.A.W. பற்றிக், "ஷாலோம்", அம்பாறை வீதி, அக்கரைப்பற்று - 8/1.

T. கஸ்தூரி, இல. 03. கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.

P. கேயூஸ், 16/16, பெயிலி குறுக்கு வீதி மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி – II விடைகள்

01. அ) - ஆண்டவர் பார்வையில் பெரியவராய் இருப்பார்.
- திராட்சை மதுவோ வேறு எந்த மதுவோ அருந்தமாட்டார்.
- தாய் வயிற்றில் இருக்கும் போதே தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவார்.

ஆ) - மக்கள் கூட்டத்தினருக்கு : இரண்டு அங்கி உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும், உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்
- வரி தண்டுபவர்களுக்கு : உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்.
- படைவீரருக்கு : நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள். யார் மீதும் குற்றம் சுமத்தாதீர்கள். உங்கள் ஊதியமே போதுமென்றிருங்கள்.

இ) ஏரோது தனது சகோதரனின் மனைவியைத் தன்னோடு வைத்திருந்ததை அவர் பகிரங்கமாகச் சுட்டிக் காட்டிக் கடிந்துகொண்டதாகும்.

02. அ) "உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம் என்று சொல்லியுள்ளதே" என்றார்.

ஆ) 1. நோய்களை குணமாக்கல் 2. அசுத்த ஆவிகளை விரட்டுதல்
3. இயற்கையோடு தொடர்பான புதுமை 4. இறந்தோரை உயிர்ப்பித்தல்

இ) - இறைவன் மனிதனுக்குக் காண்பிக்கும் அளவற்ற அன்பு விளங்குகிறது.
- இறைவன் மனிதனுக்கு வெளிப்படுத்தப்படுகிறார்.
- இறை மகிமையும், வல்லமையும் வெளிப்படுகின்றன.
- இயேசு இறைமகன் என்று உறுதிபடுத்தப்படுகின்றது.
- இயேசுவின் மறைத்தூதுப் பணி உறுதிப்படுத்தப்படுகிறது.
- இறையாட்சியின் அடையாளம் மிளிர்கிறது.

03. அ) பார்வை பெறும் உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று.
ஆ) மகளே துணிவோடிரு. உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று.

04. அ. 1. பறவைகள் வந்து அவற்றை விழுங்கிவிட்டன.
2. மண் ஆழமாக இல்லாததால் விரைவில் முளைத்தன. கதிரவன் மேலே எழ காய்ந்து வேரில்லாமல் போனது.
3. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கிவிட்டன..

தொடரும் .....

# வாழ்த்துகின்றோம்!

இலங்கை அதிபர் சேவை தரம் 2ஐச் சேர்ந்த 31 தமிழ் அதிபர்கள் பொதுச் சேவை ஆணைக் குழுவின் கல்விக் குழுவால் இலங்கை அதிபர் சேவை தரம் 1ற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து மூவரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பன்னிருவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதில் எழுவர் மட்டக்களப்பு வலயத்தைச் சேர்ந்தவர்கள். சுமார் 2600 பேர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியபோதும் 263 பேர் மட்டுமே தேசிய ரீதியில் தெரிவானார்கள். அதில் 31 தமிழ் அதிபர்களும் 37 முஸ்லிம் அதிபர்களும் உள்ளடங்குவர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அண்மையில் கல்வியமைச்சர் அகிலவிராஸ் காரியவாசம் அவர்களால் வழங்கிவைக்கப் பட்டன. எமது "தொண்டன்" துணையாசிரியர் திரு. R. பெஸ்லியோ வாஸ் (மட்/புனித மிக்கேல் கல்லூரி தே.பா) அவர்களும் இலங்கை அதிபர் சேவையின் 1ம் தரத்திற்கு 2015ம் ஆண்டு முதல் பதவியுயர்த் தப்பட்டுள்ளார். இவ்வாறு பதவியுயர்வு பெற்ற ஒரேயொரு கத்தோலிக்க அதிபர் இவர் மட்டுமே. இவருக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு அருட்கலாநிதி. ஜோசப் பொன்னையா ஆண்டகை தனது வாழ்த்துகளையும், ஆசீரையும் அளித்துள்ளார்.



"உலகத்தாருக்கு நீ அளிப்பது உன் நன்னடத்தை.
உலகத்தாரிடமிருந்து நீ பெறுவது புகழ். இந்த உண்மையை நீ எப்போது உணருகிறாயோ அப்போது தான் நீ வாழ ஆரம்பிக்கிறாய்" - பி. டெய்ஸர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. "இன்று கோதுமை அறுவடையன்றோ? இடியும், மழையும் அனுப்பும்படி நான் ஆண்டவரிடம் மன்றாடுவேன். உங்களுக்காக ஓர் ........................ கேட்டது, ஆண்டவர் கண் முன் நீங்கள் செய்த மாபெரும் குற்றம் என்பதை இதனால் நீங்கள் கண்டுணர்வீர்கள்" என்றார் சாமுவேல்.

   அ) தலைவனை ஆ) அரசனை இ) வீரனை

2. சாமுவேல் ஆண்டவரிடம் மன்றாட, அவர் அன்று இடியும், மழையும் அனுப்பவே, மக்கள் அனைவரும் ஆண்டவரிடமும், சாமுவேலிடமும் மிகுந்த அச்சம் கொண்டனர். மக்கள் ........................ நோக்கி, "நாங்கள் சாகாவண்ணம் ஆண்டவரிடம் மன்றாடும்" என்றனர்.

   அ) சாமுவேலை ஆ) அரசனை இ) ஆண்டவரை

3. மேலும், அவர்கள் "ஏனெனில், நாங்கள் செய்த ........................ அனைத்தோடும் எங்களுக்காக ஓர் அரசனைக் கேட்ட இந்தக் குற்றமும் சேர்ந்துகொண்டது" என்றதும் சாமுவேல் அவர்களிடம் "அஞ்ச வேண்டாம்" என்றார்.

   அ) குற்றங்கள் ஆ) தீமைகள் இ) பாவங்கள்

4. சாமுவேல் தொடர்ந்தும் "நீங்கள் இக்குற்றங்களை எல்லாம் செய்திருப்பினும் ஆண்டவரைப் பின்பற்றுவதிலிருந்து விலகாமல் அவரையே உங்கள் முழுமனத்தோடு வழிபடுங்கள். பயனற்ற, விடுவிக்க இயலாத சிலைகளை நாடிச் செல்ல வேண்டாம். அவை .........................

   அ) வீணே ஆ) பிழையே இ) கூடாது

5. தம் மாபெரும் ........................ பொருட்டு, ஆண்டவர் தம் மக்களைப் புறக்கணிக்க மாட்டார். ஏனெனில், உங்களைத் தம் மக்களாக்க அவரே திருவுளங் கொண்டார். என்னைப் பொறுத்தமட்டில், உங்களுக்காக மன்றாடுவதை நிறுத்துவதானால் அவருக்கெதிராகப் புரியும் குற்றம் என்னை விட்டு விலகட்டும்.

   அ) பெயரின் ஆ) புகழின் இ) மாட்சியின்

6. நான் உங்களுக்கு நல்ல, நேரிய வழிகளைக் கற்றுக்கொடுப்பேன். ஆண்டவருக்கு மட்டும் ........................ நடந்து, உங்கள் முழுமனத்தோடு உண்மையாகவே அவருக்கு ஊழியம் செய்யுங்கள். அவர் ஆற்றிய மாபெரும் செயல்களை நினையுங்கள். தீமை செய்தால் அரசனும், நீங்களும் அழிவீர்கள்" என்றார்.

   அ) பயந்து ஆ) அஞ்சி இ) கீழ்ப்படிந்து

7. சவுல் அரசராகி ஓராண்டு ஆனபின், இஸ்ரயேல் மீது இரண்டாம் ஆண்டு ஆட்சி செய்தார். தமக்காக இஸ்ரயேலிலிருந்து மூவாயிரம் பேரைத் தேர்ந்தார். ........................, பெத்தேல் மலையிலும் சவுலுடன் இரண்டாயிரம் பேர் இருந்தனர்.

   அ) பெத்லேமிலும் ஆ) இஸ்ரயேலிலும் இ) மிக்மாசிலும்

8. பென்யமினைச் சார்ந்த ........................ யோனத்தானுடன் ஆயிரம்பேர் இருந்தனர். எஞ்சியோரை அவரவர் இல்லத்திற்கு அனுப்பினார். யோனத்தான் கெபாவில் எல்லைக் காவலில் இருந்த பெலிஸ்தியரை வெட்டி வீழ்த்தினார். பெலிஸ்திய மக்கள் அதைக் கேள்வியுற்றனர்.

   அ) பெத்தேலில் ஆ) மிக்மாசில் இ) கிபயாவில்

9. 'எபிரேயரும் இதைக் கேட்கட்டும்' என்று நாடெங்கும் சவுல் எக்காளம் ஊதுவித்தார். சவுல் ........................ எல்லைக் காவலரை வெட்டி வீழ்த்தியதையும், அதனால் அவர்களுக்கு இஸ்ரயேல் மீது கடும்பகை ஏற்பட்டதையும் அறிந்து இஸ்ரயேலர் சவுலோடு கில்காலுக்குச் சென்றனர்.

   அ) கிபயாவின் ஆ) பெலிஸ்தியரின் இ) மிக்மாசியரின்

10. பெலிஸ்தியர் முப்பதாயிரம் தேர்களோடும், ஆறாயிரம் குதிரை வீரர்களோடும், கடற்கரை மணலளவு வீரர்களோடும் பெத்தேலுக்கு ........................ மிக்மாசில் பாளையம் இறங்கினார்கள். இஸ்ரயேலர் ஒளிந்து கொண்டனர்..

    அ)கிழக்கே ஆ) மேற்கே இ) தெற்கே

**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 180

## பரிசுப் போட்டி



(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

**சிறுவர்களுக்கு மட்டும் :**
முடிவுத் திகதி :
**30.06.2018**

1. இந்தியப் பெருங்கடலின் மிக ஆழமான பகுதியான "ஜாவா ட்ரெஞ்" உடைய ஆழம் :
   (7753 மீற்றர் - 7752 மீற்றர் - 7572 மீற்றர்)

2. உலகிலேயே மிகப் பெரிய துறைமுகம் :
   (நியூயோர்க் - சிங்கப்பூர் - ஜப்பான்)

3. நமது உடலில் அதிகரிக்கும் கொழுப்பைக் குறைக்க உதவுவது:
   (பூண்டுக் கஞ்சி - நாடங்காய்க்கறி - மிளகு இரசம்)

4. புனித தோமஸ் அக்குவினாஸ் "திருச்சபையின் மறை வல்லுநர்" ஆன வருடம்:
   (1274 - 1323 - 1567)

5. 'அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் ..........................'
   (ஆவி - பேய் - இருட்டு)

6. "மாட்டு" எனும் எதிர்மறை இடைநிலை பெறும் சொல்:
   (பாடுமாட்டும் - செய்யமாட்டு - செய்யமாட்டேன்)

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
**திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 180**
**தொண்டன்**
**அ. பெ. எண் – 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# போட்டி முடிவுகள் ...

**திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் : 178,**

பங்கு பற்றியோர் 16 பேர், ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோர் 13 பேர்.

## திருவிவிலியம் கற்போம் - 178 விடைகள்

தவணை, சவுல், கனன்றது, ஆண்டவர், யூதாவினர், நாளை, பாளையத்தினுள், இஸ்ரயேலுக்கு, அரசாட்சியை, அரசனை

## அறிவை வளர்ப்போம் - 178 விடைகள்

1. ஸ்கான்டிநேவியா
2. ஹைகுரோ மீற்றர்
3. அரமிக்
4. கல்வின்
5. வளையுமா
6. போதல்

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி II ம் பிரிவில் 200/= பரிசு பெறுவோர்

* கு. பவ்வியா,
இல. 90, காளி கோயில் வீதி,
பெரிய கல்லாறு - 03.

* S. தேவதர்ஷனா,
16, பெரிய கல்லாறு - 02,
கல்லாறு.

* C.S. சுகேஷன்,
15/11, 5ம் குறுக்கு,
சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.

* சாமிலி ஜெயகுமார்,
53/22, சித்திவிநாயகர் குறுக்கு வீதி,
புன்னைச்சோலை,
மட்டக்களப்பு.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 130 முடிவுகள்

**1ம் பரிசு : 400/=**

* H.J. றொசலியா சருணிதா,
15/13, 5ம் குறுக்கு,
சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.

**2ம் பரிசு : 300/=**

* L.J.C. ஹர்சன்,
72/12 A, 1ம் குறுக்கு,
ஞானசூரியம் சதுக்கம்,
மட்டக்களப்பு.

**3ம் பரிசு : 200/=**

* உ. யூட் கஸ்பர்,
கடற்கரை வீதி,
தேற்றாத்தீவு - 02.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. ழீஆ : ர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நினைவஞ்சலி

கடவுளோடே கடவுளாய் வாழும் எங்கள்
அப்பா அம்மாவின் நினைவுகள்



**அமரர். சூசைப்பிள்ளை பங்கிராஸ்**

பிறப்பு : 1943.11.04
இறப்பு : 2008.05.25
10ம் வருட நினைவு

**அமரர். றோசறி பங்கிராஸ்**

பிறப்பு : 1955.07.02
இறப்பு : 2011.05.30
07ம் வருட நினைவு



உலகுக்கு ஒளி கொடுக்கும் சூரிய சந்திரனை போல
எங்கள் வாழ்வில் ஒளி கொடுக்கும் பங்கி றோசியே
பத்தாண்டுகள் ஏழாண்டுகளென்று இவ்வுலகிலுள்ளோர்
நீங்கள் மரணித்துவிட்டீர்களென்று வாய்மொழியலாம்
எங்கள் அப்பா அம்மாவே நீங்கள் மரணிக்கவில்லை
எங்களோடே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்

நாங்கள் துயில் கொண்டெழுந்து பார்பதும் உங்கள் முகம்
வேலையென்று செல்லும் போது சொல்லி செல்வதும் உங்கள் முகம்
வேதனையால் தவிக்கும் போதும் ஆறுதல் தேடுவதும் உங்கள் முகம்
சந்தோசத்தால் மிதக்கும் போதும் மகிழ்ச்சி தேடுவதும் உங்கள் முகம்
இப்படி எங்களோடு வாழும் போது எப்படி நீங்கள் மரணித்திருப்பீர்கள்?
கண்ணுக்கு தெரியாமல் கடவுள் நம்மோடு வாழ்ந்து ஆசீர்வதிப்பது போல
இன்றும் எங்களோடே நீங்கள் வாழ்ந்து ஆசீர்வதித்துக்கொண்டிருக்கிறீர்கள்

**இன்றும் உங்கள் ஆசீரோடு வாழும்**
**உங்கள் பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org